(இந்திய அரசின் ஜனவரி 6, 2011 தேதியிட்ட, சிறப்புச் செய்திச் திரட்டிதழில் பாகம் II, பிரிவு 3, உப-பிரிவு (ii)இல் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவிப்பாணை

# கடற்கரை ஒழுங்குமுறை அறிவிப்பாணை
# சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம்

(சுற்றுச்சூழல், வனங்கள் மற்றும் வனவிலங்குகள் துறை)

புது தில்லி__ செப்டம்பர், 2010

எஸ். ஓ _19(E): இதன்படி, 15, செப்டம்பர், 2010 தேதியிட்டு வெளியிடப்பட்டிருக்கும் S.O.No.2291 (E), எண் கொண்ட அரசாணையின் மூலம் கடற்கரை ஒழுங்குமுறை மண்டலமாக கடலோரப் பரப்புகளை அறிவித்தல், அத்தகைய கடற்கரை ஒழுங்குமுறை மண்டலங்களில் Coastal Regulation Zone (CRZ) இருக்கக்கூடிய தொழிற்சாலைகள், அவற்றின் செயல்பாடுகள், வழிமுறைகள் ஆகியவற்றின் மீது தடை உத்தரவுகள் பிறப்பித்தல் தொடர்பாய் இருக்கக் கூடிய ஆட்சேபங்களையும், ஆலோசனைகளையும் தரும்படி கோரும் ஒரு வரைவு அறிவிப்பாணை 1986ஆம் ஆண்டைய சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டத்தின் பிரிவு 3இன் உப-பிரிவு 2இன் ஷரத்து மற்றும் பிரிவு (V) இன் உப பிரிவு (1)இன் கீழ், வெளியிடப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட அரசு சிறப்புச் செய்தித் திரட்டிதழ் அறிவிப்பாணையின் பிரதிகள் பொதுமக்களுக்கு 15,செப்டம்பர்,2010 அன்று கிடைக்குமாறு செய்யப்பட்டது

அவ்விதம் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபங்கள் மத்திய அரசினால் கவனமாகப் பரிசீலிக்கப்பட்டன.

எனவே, 1986ஆம் ஆண்டைய (1986இன் 29) சுற்றுச்சூழல்(பாதுகாப்பு) சட்டத்தின் பிரிவு 3இன் உப-பிரிவு (2)இன் உப-பிரிவு (1) மற்றும் ஷரத்து (v) இன் கீழ் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி மத்திய அரசு, கடலோரப் பகுதிகளில் வாழ்ந்துவரும் மீனவ சமுதாயங்களுக்கும், மற்ற உள்ளூர் சமுதாயங்களுக்கும் வாழ்வாதாரப் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், கடலோரப் பகுதிகளின் பரப்புகளையும், நீட்சிகளையும் பராமரிக்கவும், பாதுகாக்கவும், அதன் தனிச்சிறப்புவாய்ந்த சுற்றுச்சூழலையும் மற்ரும் அதன் நீர்ப்பரப்புகளையும் பேணிப்பரமாரிக்கவும், கடலோரப்பகுதிகளில் உள்ள இயற்கைச்சீற்றங்கள், அதன் விளைவான பேரழிவுகள், புவி வெப்பமாதல் காரணமாய் உயர்ந்துகொண்டே போகும் கடல் மட்டம் ஆகியவை தொடர்பான அபாயங்களைக் கணக்கிலெடுத்துக்கொண்ட அளவில், அறிவியல்கோட்பாடுகளின் அடிப்படையில் நிலைப்புத்தன்மை கூடிய வழியில் வளர்ச்சி-மேம்பாட்டை உறுதிசெய்யவும், வளர்க்கவும், அந்தமான், நிகோபார், இலட்சத்தீவு ஆகிய தீவுகள் மற்றும் இந்த தீவுகளைச் சூழ்ந்துள்ள கடற்பரப்புகளையும், தவிர்த்த அளவில், நம் நாட்டின் கடலோரப் பரப்புகளையும் அவற்றின் நீட்சிகளையும், தனது ஆட்சிப்பரப்பெல்லை முடிய கடற்கரை ஒழுங்குமுறை மண்டலமாக (இதுமுதல் CRZ என்று குறிப்பிடப்படும்) அறிவிக்கிறது: இதன் மூலம் இந்தப் பகுதிகளில் எந்தவிதமான தொழிற் சாலைகளும் தொடங்கபடவோ, விரிவுபடுத்தப்படவோ கூடாது என்றும், அபாயகரமான மூலகங்கள் (கையாளல், நிர்வகித்தல் மற்றும் எல்லைதாண்டிய போக்குவரத்து) விதிமுறைகள், 2009 இல் வகுத்துரைக்கப்பட்டுள்ள அபாயகரமான மூலகங்களைப் தயாரிக்கக் கூடிய, அல்லது கையாளல், அல்லது வெளியேற்றக்கூடிய எந்தவிதமான செயல்பாடுகளும் மேற்கொள்ளப்படலாகாது; என்றும் தடைவிதிக்கிறது.

மேலும், 1986ஆம் ஆண்டைய சுற்றுச்சூழல்(பாதுகாப்பு) சட்டத்தின் விதிப்பிரிவு (5) இன் ஷரத்து (d) மற்றும் (உப-பிரிவு (3) ஆகியவற்றின் கீழ் வழங்கபட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தும் அளவில், 1991ஆம் ஆண்டு பிப்ரவரி 19 தேதியிட்டு, S.O.114(E) என்ற எண்ணிடப்பட்டு சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறைஅமைச்சகம் வெளியிட்ட அறிவிப்பாணையினை மத்திய அரசு, மாற்றி அமைத்திட்டது. புதிய விதிமுறை கொண்டுவரப்படுவதற்கு முன்பாக நடந்த அல்லது நடத்துவதென விடுபட்ட செயல்பாடுகளைத் தவிர்த்து, கீழ்க்காணும் பகுதிகள கடற்கரை ஒழுங்குமுறை மண்டலங்களாக, அறிவித்து இந்த அறிவிப்பு வெளியிடப்படும் தேதியிலிருந்து இந்தப் பகுதிகளில் தொழிற்சாலைகள் அமைத்தல், விரிவாக்குதல் மற்றும் அத்தகைய செயல்பாடுகளுக்குக் கீழ்க்காணும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

i. கடல் முகப்பில் நிலம் நோக்கிய பகுதிகளில், உயர் பேரலைக் கோட்டிலிருந்து (HTL) 500 மீட்டர் வரையான தரைப்பகுதி:

ii. அலைகளின் தாக்கம் கொண்ட, கடலோடு இணைந்துள்ள நீர்நிலைகளின் நிலம் நோக்கிய பகுதியில் பேரலை வரிசையிலிருந்து 100 மீட்டர் வரையிலான தரைப்பகுதி. 100 மீட்டர் வரையிலான நிலப்பரப்பு அல்லது நீர்நிலையின் அகலம், இரண்டில் எது குறைவானதோ, அதுவரியில் கடற்கரை ஒழுங்குமுறை மண்டல விதிமுறைகள் அமுல்படுத்தப்படும். மேலும், அத்தகைய நீர்ப்பரப்புகள் அமைந்துள்ள பகுதிகளில் வளர்ச்சி-மேம்பாடுப் பணிகள் அலைகளின் தாக்கம் உணரப்படும் தொலைவு வரை கட்டுப்படுத்தப்படும். இந்தத் தொலைவும், நீளமும் வருடத்தின் மிக வறண்ட காலகட்டத்தில் உப்புச் செறிவு ஆயிரம் பகுதிகளுக்கு 5 பகுதிகள் வரையில் உப்பின் செறிவு உள்ள பகுதிகள் என்ற அடிப்படையில் அடையாளம் காணப்பட்டு, நிர்ணயிக்கப்பட்டு, அதன் அளவில் கடற்கரை மண்டல மேலாண்மை திட்டங்களில்( CZMP – COASTAL ZONE MANAGEMENT PLANS) வரையறுத்துத் தரப்படும்.

*விளக்கம்: இந்த உப-பத்தியின் நோக்கங்களைப் பொறுத்தமட்டில் பேரலை தாக்கம் உள்ள நீர்நிலைகள் என்றால், கடல் பேரலை அல்லது கடலின் உயர் அலைகளின் செல்வாக்கு அல்லது தாக்கம் உள்ள விரிகுடா, கழிமுகம், ஆறுகள், சிற்றோடைகள், காயல், கடற்கரைகாயல், குளங்கள் ஏரிகள் போன்ற , கட்லோடு இணைப்புள்ள நீர்ப்பரப்புகளைக் குறிக்கும்*

.

iii. கடல்முகத்தைப் பொறுத்தவரை, நிலம் நோக்கிய பகுதியில் உயர்பேரலைக் கோட்டிற்கும் இடர்க்கோட்டிற்கும் இடைப்பட்ட பகுதி மற்றும் உயர் பேரலைக்கோட்டிலிருந்து ரு00 மீட்டர் தொலைவிலுள்ள நிலப்பகுதி, மற்றும் அலைகளின் தாக்கமுடைய நீர்ப்பரப்புகளைப் பொறுத்தவரை இடர்க்கோட்டிற்கும், 100 மீட்டர் கோட்டிற்கும் இடைப்பட்ட பரப்பு. இங்கு, ஓதப் பேரலைகள், அலைகள், கடல்மட்ட ஏற்றம் மற்றும் கடற்கரையோர மாற்றங்கள் ஆகியவற்றை கணக்கில் எடுத்துக் கொண்டு அதன் அடிப்படையில் இந்திய நில அளவாய்வு நிறுவனம் (SOI) மூலம் மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் வரையறை செய்யும் எல்லைப்பகுதி "இடர்கோடு" எனப்படுகிறது.

iv. உயர் பேரலை வரிசைக்கும் (HTL) தாழ் பேரலை வரிசைக்கும் (LTL) இடைப்பட்ட நிலப்பகுதி ஏற்றவற்ற இடைப் பகுதி (Inter tidal Zone) எனப்படும்.

v. கடல்நீர்ப் பகுதியில் தாழ் பேரலை வரிசைக்கும் நாட்டின் கடல் எல்லைப் பகுதிக்கும் (12Nm) இடைப்பட்ட கடல்நீர்ப் பகுதியும், கடற்படுகையும்; மற்றும் பேரலைகளின் தாக்கமுள்ள நீர் பகுதிகளில், தாழ் பேரலைத் பகுதிக்கும் மறுகரையிலுள்ள தாழ்பேரலைத்தாக்கப் நீர் பகுதிக்கும், இடைப்பட்ட நிலப்படுகையும்.

2. இந்த அறிவிப்பாணையைப் பொறுத்தமட்டில் HTL அல்லது உயர்பேரலைவரிசை என்பது உவாபெருக்கு (பௌர்ணமி அமாவாசை) நாட்களில் கடலில் எழும் ஓதப் பேரலைகள் தரையில் எவ்வளவு அதிக தொலைவு வரை பரவுமோ அதுவரையான பகுதி ஆகும். இணைப்பு 1 இல் தரப்பட்டுள்ள வழிகாட்டுதல்களுக்கு இணங்க இந்த HTL (உயர்பேரலைக்கோடு) எல்லை என்பது மத்திய வன மற்றும் சுற்றுச்சுழல் அமைச்சரவையின் ஒப்புதல் பெற்ற ஆணையம் அல்லது ஆணையங்கள் மூலம், நாடு முழுவதும் இந்த அறிவிப்பாணை வெளியிடப்பட்ட தேதியிலிருந்து ஒரு வருடத்திற்குள்ளாக வகுத்துரைக்கப்படும்.

3. கடற்கரை ஒழுங்குமுறை மண்டலங்களில் தடைசெய்யப்பட்டுள்ள செயல்பாடுகள்:- கடற்கரை ஓழுங்குமுறை மண்டலங்களில் (CRZ) பின்வருவன தடைசெய்யப்பட்ட நடவடிக்கைகளாக அறிவிக்கப்படுகின்றன.

i. கீழ்க்கண்டவைகள் தவிர, அனைத்து புதிய தொழிற்சாலைகள் அமைப்பது, நடப்பில் உள்ள தொழிற்சாலைகளின் விரிவாக்கம்,-

a. நேரடியாக கடல்நீர் முகப்பு அல்லது கடற்கரை முகப்பு வசதிகளுடன் நேரடித் தொடர்புடைய செயல்பாடுகள்.
விளக்கம்: "கடற்கரை முகப்பு வசதிகள்" என்றால், இந்த அறிவிப்பாணையின் கீழ் அனுமதிக்கப்பட்டுள்ள கடற்கரை முகப்பு வசதி தேவைப்படும் செயல்கள். இதில் கடற்கரை முகப்பு அவசியம் தேவைப்படும் துறைமுகங்கள், படகுத்துறைகள், துறை மேடை, துறைமேடைகளின் நீட்சி, கரை அரிப்புத் தடுப்பு, அலைமுறிகள், குழாய் வழிகள், கலங்கரை விளக்கங்கள், கடல் பயண உதவி வசதிகள், கடற்கரை காவல்நிலையங்கள், போன்ற அன்னபிற அடங்கும்.

b. அணுஆற்றல் துறைத் திட்டங்கள்.

c. மரபு சாரா ஆற்றல் உற்பத்தி அமைப்புகள் மற்றும் கடற்கரை ஓழுங்குமுறை மண்டலம் CRZ-I (i)-ன் கீழ் குறிப்பிடப்படாத பகுதிகளில், கடல்நீரை குடிநீராக மாற்றும் திட்டங்கள். சமூக தாக்கங்களையும் கணக்கில் கொண்ட தாக்க மதிப்பீட்டு ஆய்வுகளின் அடிப்படையில் அனுமதிக்கப்படும்

d. முன்பே அனுமதிக்கப்பட்டுள்ள அளவில் நவி மும்பை பகுதியில் பசுமை வளாக விமான நிலையம் அமைத்தல்.

e. மீனவர்கள் உள்ளிட்ட, உள்ளூர் சமுதாயங்களின் குடியிருப்புகலை புனரமைத்தல், பழுதுபார்த்தல் வேலைகள், உள்ளூர் நகர்ப்புற மற்றும் கிராமப்புற வளர்ச்சி-மேம்பாட்டுத் திட்ட ஒழுங்குமுறைவிதிகளுக்கு ஏற்றவாறு மேற்கொள்ளப்படலாம்.

ii. பெட்ரோலியப் பொருட்களை தயாரித்தல் மற்றும் சேமித்தல் அல்லது இடர்விளையக்கூடிய பொருட்களை அகற்றுதல் ஆகிய அனைத்து நடவடிக்கைகள் சுற்றுச்சூழல் அமைச்சக அறிவிப்பாணைகள் S.O.No.594 (E) (28-07-1989) மற்றும் S.O.No.966(E) (27-11-1989) மற்றும் GSR 1037(E) ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள படி தடை செய்யப்படுகின்றன. தவிரவும்:

a. கப்பல்களிலிருந்து துறைமுகங்கள், சுத்திகரிப்பு நிலையங்கள், சரக்கு முனையங்கள் வரையிலும் மற்றும் நிலை எதிர்மாறாக அபாயகரமான பொருட்களை எடுத்துச் செல்லுதல்

b. கடற்கரை ஒழுங்குமுறை மண்டலம் CRZ I-(i) ன் கீழ் குறிப்பிடப்படாத இடங்களில் மத்திய பெட்ரோலிய மத்திய பெட்ரோலிய மற்றும் எரிவாயு அமைச்சகத்தின் பெட்ரோலிய தொழில்கள் பாதுகாப்பு இயக்குநரகம் வெளியிட்டுள்ள பாதுகாப்பு ஒழுங்குமுறை விதிகளுக்கு ஏற்பவும் மற்றும் மத்திய சுற்றுச்சுழல் மற்றும் வன அமைச்சகம் வெளியிட்டுள்ள வழிகாட்டுதல்களுக்கு ஏற்பவும், மேலும், சுற்றுச்சூழல் பாதுகாப்பைக் கவனத்தில் கொண்டு அது தொடர்பாய் இணக்கமான மற்றும் மீளுருவாக்க நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்து மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் வெளியிடக்கூடிய அனைத்து நிபந்தனை விதிகளுக்கும் கட்டுப்பட்ட அளவில் இந்த அறிவிப்பாணையின் இணைப்பு II-ல் குறிப்பிடப்பட்டுள்ள பெட்ரோலியப் பொருட்கள் மற்றும் திரவ எரிவாயு இருப்பு வைப்பதற்கு தேவையான வசதிகள் அமைக்க அனுமதிக்கப்படுகின்றன.

கடற்கரை ஒழுங்குமுறை மண்டலம் (CRZ) I-i ன் கீழ் குறிப்பிடப்படாத இடங்களில் அமோனியா, பாஸ்பாரிக் அமிலம், சல்பர், சல்ப்யூரிக் அமிலம், நைட்ரிக் அமிலம் போன்ற உர உற்பத்திக்குத் தேவையான கச்சாப் பொருட்களையும், உரங்களையும் கடற்கரைப் பகுதியில் இறக்குதல் மற்றும் இருப்புவைத்தல் ஆகியவை அனுமதிக்கப்படும் அளவில் மேற்கண்ட செயல்பாடுகள் இடம்பெறலாம்.

iii. மீன் பதனிடும் தொழிற்சாலைகளை நிறுவுதல், விரிவுபடுத்துதல் - அதற்கான கிடங்கு வைத்துக் கொள்ளுதல் யாவும் – மீன் உற்பத்தி மற்றும் இயற்கையாக மீன் உலரவைத்தல் நிகழும் இடங்களை தவிர்த்த அளவில் – அனுமதிக்கப்பட்ட இடங்களில் மேற்கொள்ளப்படலாம்.

iv. கீழ்க்கண்ட விதிவிலக்குகள் நீங்கலாக, இதர அனைத்துவகையான நில சீரமைப்பு, வரப்பு கட்டுதல், அல்லது கடல்நீரின் இயற்கை வழிப்போக்கிற்கு இடையூறு விளைவிக்கும் அனைத்து நடவடிகைகளும் தடை செயப்படுகின்றன:-

a. கடற்கரை முகப்பு வசதிகளின் நவீனமயமாக்கம், விரிவாக்கம், மற்றும் அலைவாய் வசதிகள் தேவைப்படும் துறைமுகங்கள், சரக்கு முனையங்கள், தோணித்துறை, மீன்பிடித் துறை, துறைமுக மேடை, துறைமுக மேடை நீட்சிகள், கப்பல் கட்டுமான சாய்தளம் அல்லது காவுகள், பாலங்கள் அமைத்தல், முட்டுகளின் மேல் அமைக்கப்பட்ட கடல் வழி சாலைகள், மற்றும் பாதுகாப்புப் படை, மற்றும் பாதுகாவலருக்கான வசதிகள் போன்ற அறிவிப்பாணையில் அனுமதிக்கப்பட்டுள்ள இதர செயல்பாடுகளுக்குத் தேவையான அத்தியாவசிய நடவடிக்கைகள்;

b. சுற்றுச்சூழல் மதிப்பீட்டு ஆய்வு (EIA) உள்ளிட்ட அறிவியல் ஆய்வுகள் அடிப்படையில் கடல் அரிப்பைத் தடுக்கும் திட்டங்களை நிறைவேற்றுதல்;

c. சுற்றுச்சூழல் மதிப்பீட்டு ஆய்வு (EIA) உள்ளிட்ட அறிவியல் ஆய்வுகள் அடிப்படையில் கப்பல் துறை, துறைமுகங்கள், கால்வாய்கள், நீர்வழிகளை பராமரித்தல்,

d. கடற்கரையோரம் உள்ள நீர்நிலைகளால் உருவாகும் மணற்திட்டுகள் உருப்பெருவதை தடுக்கும் நடவடிக்கைகள், ஓத அலை ஒழுங்கமைப்பான்களை நிறுவுதல், வெல்ல நீர் வடிகால் அமைப்புகள், நன்னீர் மறு ஊட்டம் பெற வழிவகை செய்தல், கடல் நீர் உட்புகுதலை தவிர்த்தல், போன்ற நடவடிக்கைகளுக்கு தேவையான பணிகள், மத்திய வன மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சகத்தால் குறிப்பிடப்பட்டுள்ள தேசிய நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும்

v. கீழ்க்கண்ட செயல்பாடுகளை தவிர்த்து, மற்ற திடக்கழிவுகள் மற்றும் திரவக்கழிவுகளை அகற்றுவதற்கு என தொழிற்பிரிவுகள் அல்லது இயக்க அமைப்புகளை நிறுவுவதும், விரிவுபடுத்துவதும் தடை செய்யப்படுகிறது:

a. நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் 1974 (1974 லின் 6) கீழ் அனுமதி பெற்று சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரைக் கடலில் விடுதல்;

b. வெள்ள நீர் வடிகால் மற்றும் நீரை இறைச்சுவதற்கு துணையான கட்டமைப்புகள் அமைத்தல்;

c. கடற்கரை ஓழுங்குமுறை மண்டலம் CRZ - I தவிர இதர CRZ மண்டலப் பகுதிகளில் இயங்கும் கடற்கரை விடுதிகள் மற்றும் உணவகங்களில் இருந்து வெளிவரும் கழிவு நீர் மற்றும் கழிவுப்பொருட்களைச் சுத்திகரித்தல் மற்றும் சுத்த்கிகரித்த கழிவுகளை வெளியேற்றுதல்;

vi. கடற்கரைப் மண்டலங்களில் சுத்திகரிக்கப்படாத ஆலைக் கழிவுகள், மாநகரம், நகரம், மற்றும் குடியிருப்புகளில் இருந்து கழிவுப் பொருட்களைக் கடலில் கலத்தல். அவ்வாறு தற்போது வெளியிடப்படும் கழுவுகளை, தொடர்புடைய பொறுப்பு அதிகாரிகள் அறிவிப்பாணை வெளியான இரண்டு ஆண்டுகளுக்குள் படிப்படியாக நிறுத்த வேண்டும்.

vii. மாநகரம், நகரங்களின் திடக் கழிவுப் பொருட்கள் (கட்டுமானப் பணிகளில் இருந்து வெளியாகும் கழுவுகளும் அடங்கிய), ஆலைகளின் திடக் கழிவுகள், மென் சாம்பல் போன்ற பொருட்களை, நிலநிரப்பல் போன்ற செயல்களுக்காக கடற்கரை மண்டலங்களில் கொட்டுதல். இத்தகைய நடவடிக்கைகள் வழக்கத்தில் இருந்தால், தொடர்புடைய பொறுப்பு அதிகாரிகள், அறிவிப்பாணை வெளியான ஓர் ஆண்டுக்குள் படிப்படியாக நிறுத்த வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

குறிப்பு: மேலே குறிப்பிடப்பட்டுள்ள பத்திகள் (v), (vi) மற்றும் (VII) இல் இடம்பெற்றுள்ள செயல்கள் படிப்படியாக நிறுத்துவது தொடர்பாக, மாநில அரசு மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு செயல்திட்டங்களை தயாரிப்பது மற்றும் அவற்றை அமுல்படுத்துவது, கண்காணிப்பது மற்றும் காலநிர்ணயம் செய்வது போன்றவற்றிற்கு தனியான நெறிமுறைகளை பிறப்பிக்கும்.

viii. அதிக அளவு கரை அரிப்பு நிகழும் கடற்கரை பகுதிகளில், 2006ஆம் ஆண்டைய EIA அறிவிப்பாணையின்படி அறிவியல் ஆய்வுகளின் அடிப்படையில் மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகத்தால் அடையாளம் காணப்பட்டு, சம்பந்தப்பட்ட மாநில அரசு மற்றும் யூனியன் பிரதேச அரசுகளோடு கலந்தாலோசித்து, நாட்டின் முக்கியமான பாதுகாப்புத் தொடர்புடைய நடவடிக்கைகளைத் தவிர மற்ற, துறைமுகங்களை நிறுவும் செயற்திட்டங்கள் அனுமதிக்கப்படலாகாது.

ix. வணிக தேவைகளுக்கு கடைகள் மற்றும் வீட்டு வசதி வளாகங்கள், விடுதிகள், பொழுதுபோக்கு போன்ற வர்த்தக நோக்கங்களுக்காக கடற்கரை நிலத்தைச் சீரமைப்பது தடை செய்யப்படுகிறது.

x. கீழ்க்கண்ட நடவடிக்கைகள் நீங்கலாக, மணல் வாருதல், பாறைகளைத் தோண்டுதல், மணற் படிவங்களை அகற்றுதல் போன்ற அனைத்து நடவடிக்கைகளும் தடை செய்யப்படுகின்றன:
   a. கடற்கரை ஒழுங்குமுறை மண்டல பகுதி (CRZ) தவிர வேறு பகுதிகளில் காணமுடியாத அரிய ரக கணிமங்களைத் தோண்டி எடுத்தல்;
   b. பெட்ரோல் மற்றும் இயற்கை எரிவாயு இருக்கிறதா என்ற ஆய்வு மேற்கொள்தல் மற்றும் வெளியே எடுத்தல்.

xi. கீழ்வருவன தவிர்த்து உயர் பேரலைக்கோட்டிலிருந்து 200 மீட்டர் வரை நிலத்தடி நீரை வாருதல் மற்றும் அவ்வற்றோடு தொடர்புடைய கட்டுமானப் பணிகள் செய்வது தடைசெய்யப்படுகின்றன:
   a. உள்ளூரைச் சேர்ந்த மக்கட்சமூகங்கள் வசிக்கும் பகுதிகளில், அவர்களுடைய தேவைகளுக்காக மட்டும்;
   b. 200 மீ- 500 மீ -க்கு இடைப்பட்ட பகுதிகளில் குடிநீர் மற்றும் மீன் வளர்ப்பு, விவசாயம், தோட்ட வளர்ப்பு போன்ற தேவைகளுக்காக, வேறு நீர்வள ஆதாரங்களே அற்ற நிலையில், இயந்திர உதவியை நாடாத அளவில் சாதாரணக் கிணறுகள் அமைத்தல் அனுமதிக்கப்படும்.
   குறிப்பு: கடல் நீர் உட்புகுவதால் பாதிக்கப்படும் பகுதிகளில் இத்தகைய நிலத்தடி நீர் தோண்டியெடுத்தல் தொடர்பாக சம்பந்தப்பட்ட மாநில அரசுகள், யூனிய்ன் பிரதேச அரசுகளால் நியமிக்கப்படும் அதிகாரி தடைவிதிக்க முடியும்.

xii. இந்த அறிவிப்பாணையின் 8 வது பத்தியில் கூறப்பட்டுள்ள கட்டுமான நடவடிக்கைகள் தவிர, கடற்கரை ஒழுங்குமுறை மண்டலம் CRZ I பகுதியில் கட்டுமானப் பணிகள் அனைத்தும் தடை செய்யப்படுகின்றன:

xiii. கடல் மணல் மேடுகள், குன்றுகள் மற்றும் இயற்கை அமைப்புகளை அழகுபடுத்துதல், பொழுது போக்கு மற்றும் அதுபோன்ற தேவைகளுக்கு செய்யப்படும் நடவடிக்கைகள் அனைத்தும் நடவடிக்கைகளும் தடைசெய்யப்படுகின்றன.

xiv. கடலோரக் காவல் நிலையங்கள் மற்றும் வனத்துறையினர் கடலை கண்காணிப்பதற்கு, காவல் ரோந்து நடவடிக்கைகளுக்குத் தேவைப்படும் வசதிகள்;

4. கடற்கரை ஒழுங்குமுறை மண்டலப் (CRZ) பகுதிகளில் அனுமதிக்கப்பட்ட நடவடிக்கைகளை ஒழுங்குமுறைப்படுத்துதல்.-- மேலே உள்ள 3 வது பத்தியில் தடைசெய்யப்பட்ட அனைத்து நடவடிக்கைகள் தவிர இதர அனுமதிக்கப்பட்ட நடவடிக்கைகள் அனைத்தும் கீழ்க்கண்டவாறு ஒழுங்குமுறைப்படுத்தப்படும்.

i.
   a. கடற்கரை ஓழுங்குமுறை மண்டலப் (CRZ) பகுதிகளுக்குள் கடற்கரை வசதிகள் மற்றும் அலைவாய் பகுதி தேவைப்படும் திட்டங்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படலாம்.
   b. இந்த அறிவிப்பாணையில் பட்டியலிடப்பட்டுள்ள திட்டங்களில் EIA சுற்றுச் சுழல் மதிப்பீட்டு அறிக்கை, 2006 (14.09.2006 தேதியிட்ட, SO 1533 (E)) தேவைப்படும் திட்டங்களுக்கு, தொடர்புடைய மாநில/ யூனியன் பிரதேச அரசுகளின், கடற்கரை மண்டல மேலாண்மை அதிகாரியின் (CZMA – COASTAL ZONE MANAGEMENT AUTHORITY) பரிந்துரை செய்தால் மட்டுமே EIA ஆய்வு செய்ய வேண்டும்.

c. இந்த அறிவிப்பாணையின் பத்தி 8 இல் தரப்பட்டுள்ளபடி CRZ பகுதிகளில் குடியிருப்பு திட்டங்கள்

d. CRZ-II-வில் 20,000 சதுர மீட்டர் பரப்புக்கு அதிகமான கட்டடப்பரப்பு உள்ள அனைத்து கட்டுமானத் திட்டங்களும், சுற்றுச்சூழல் பாதிப்பு மதிப்பீடு (EIA) அறிவிப்பாணை 2006-ன் கீழ் அங்கீகரிக்கப்படவேண்டும். 20,000 ச.மீ. குறைவான கட்டடப்பரப்பு உள்ள திட்டங்கள், குறிப்பிட்ட கடற்கரை மண்டல மேலாண்மை ஆணையத்தின் (CZMA) பரிந்துரைகளை பெற்ற பின்னர் இந்த அறிவிப்பாணைக்கு இணக்கமாக உரிய மாநில அரசு அல்லது யூனியன் பிரதேச அரசு அனுமதிக்கலாம். மேலும் தொடர்புடைய (CZMA) வின் பரிந்துரைகளைப் பெற்ற பின்னரே சுற்றுச்சூழல் பாதிப்பு மதிப்பீடு (EIA) அறிவிப்பாணை 2006-ன் கீழ் சுற்றுச்சூழல் அனுமதியினை தொடர்புடைய அதிகாரிகள் வழங்க வேண்டும்.

e. மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம், ஒரு குறிப்பிட்ட அல்லது பொதுவான ஆணையின் மூலம், திட்டங்களால் பாதிக்கப்படக் கூடிய பொதுமக்களிடம் கருத்தாய்வு நடத்தப்பட வேண்டிய திட்டங்களை அறிவிக்கலாம்.

f. துறைமுகங்கள், சரக்கு முனையங்கள் அமைத்தல், மீன்பிடித் துறை, துறைமுக மேடை, துறைமுக மேடையின் நீட்சி, கப்பல்களை பழுது பார்க்க அமைக்கப்படும் சரிவு, கப்பல் கட்டும் தளங்கள், அலை முறிப்பான்கள், கொண்பணை, கடல் அரிப்புத் தடுப்பு முயற்சிகள்;

ii. பின்வரும் செயல்பாடுகளுக்கு மத்திய அரசு சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்தின் ஒப்புதல் தேவைப்படுகிறது: அவையாவன:

a. 2006ஆம் ஆண்டைய அறிவிப்பாணைப் பட்டியலில் இடம்பெறாத செயல்பாடுகள்:

b. பாதுகாப்புத் திட்டங்களுக்கு என செயல்படும் அமைப்புகளாக வகைபடுத்தப்பட்ட செயல்கள் தவிர்த்து, கடற்கரை வசதிகள் மிக அடிப்படையாகத் தேவைப்படும் கப்பல் கட்டுமான சாய்தளம், படகுத் துறை, கப்பல் துறை மேடை, கப்பல் துறை மேடையின் நீட்சி போன்ற அணு ஆற்றல் அல்லது பாதுகாப்பு துறைகளுக்குத் தேவையான கட்டுமானப் பணிகள்; குடியிருப்புகள், அலுவலகக் கட்டிடங்கள், மருத்துவமனைகள், போர்கால பட்டறைகள் மற்றும் பாதுகாப்புத் திட்டங்கள் 2006ஆம் ஆண்டைய EIA அறிவிப்பாணைப்படி அனுமதிக்கப்படும்

c. கலங்கரை விளக்கங்களை கட்டுதல், இயக்குதல்

d. குழாய்கள் பதித்தல், கன்வேயர் பெல்டுகள் பொருட்களை சுமந்து செல்லும் பட்டையின் கட்டமைப்புகள் அமைத்தல், மின் செலுத்தும் கம்பிகள் அமைத்தல்

e. பெற்றோலியம் இயற்கை எரிவாயு துரப்பன நடவடிக்கைகள், வழிவகைகள் மற்றும் அவை தொடர்பான இணை நடவடிக்கைகள் அனைத்தும்.

f. (ஊ) கச்சாப்பொருட்களின் பொக்குவரத்திற்குத் தேவைப்படும் கடற்கரை வசதிகள்; குளிரூட்டுவதற்கு தேவையான நீரை எதுக்குக்கும் வசதிகள், மின் ஆலைகளிலிருந்து கழிவுநீரையும் குளிர் கூண்டிலிருந்து வெப்பமான நீரை வெளியேற்றவும் தேவையான வசதிகள்; பத்தி 4 இன் f, g, and h இல் காணப்படுவதுபோன்ற செயல்திட்டங்களுக்கு மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம் நிர்னயிக்கும்.

g. அணு ஆற்றல் துறையினரால் பட்டியலிடப்பட்ட அரிய கனிமங்களை அகழ்ந்தெடுக்கும் கனிமச் சுரங்கங்கள்

h. மரபு சாரா எரிசக்தி உற்பத்தி, கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டங்கள் மற்றும் வானிலை தொலைகண்டுணர் கருவிகள் அமைப்பதற்குத் தேவையான வசதிகள்

i. தொல்லியல் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கட்டிடங்கள், (ii) பாரம்பரியக் கட்டடங்கள் மற்றும் பயன்பாட்டில் உள்ள கட்டிடங்கள் இவ் வகைப்பாட்டில் வழிபாட்டுத்தளங்கள், கல்வி நிலையங்கள், மருத்துவ வசதி கொண்ட இடங்கள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படும் தலங்களை இடித்தல் மற்றும் புனர்நிர்மாணித்தல்;

4.2 அனுமதிக்கத்தக்க நடவடிக்கைகளுக்கு அனுமதிபெறும் நடைமுறைகள்:-இந்த அறிவிப்பாணையின் கீழ் வரும் அனைத்துத் திட்டங்களும் கீழ்க்கண்ட நடைமுறைகளின்படி அனுமதியளிக்க பரிசீலிக்க ஏற்றுக்கொள்ளப்படும்:

i. கடற்கரை ஒழுங்குமுறை மண்டலத்தில் திட்டங்கள் நிகழ்த்த முற்படுவோர், தொடர்புடைய மாநிலம் அல்லது யூனியன் பிரதேசத்தின் கடற்கரை மண்டல மேலாண்மை ஆணையத்திடம் கடற்கரை ஒழுங்குமுறை மண்டல அறிவிப்பாணையின் கிழ் அனுமதி கோர கீழ்க்கண்ட விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

(a) படிவம் - 1 (அறிவிப்பாணையின் இணைப்பு - 4)

(b) கட்டுமானச் பணிகள் 4 (c) மற்றும் (d)யின் கிழ் வருபவை தவிர்த்து, மற்ற செயல் திட்டங்கள், கடல் மற்றும் நிலப்பகுதி EIA உள்ளிட்ட துரித சுற்றுச்சூழல் பாதிப்பு EIA மதிப்பீட்டு அறிக்கை

(c) மாநில மற்றும் யூனியன் பிரதேச அரசுகளிடம் கலந்தாலோசித்து, அறிவியல் ஆய்வுகளின் அடிப்படையில், குறைந்த அல்லது இடைதர அறிமானம் உள்ள பகுதிகள் என்று மத்திய சுற்றுச்சூழல் வனத்துறை அமைச்சகத்தால் வரையறுக்கப்பட்ட பகுதிகளுக்கு திரள் நிகழ்வின் ஆய்வுகளோடு, அனைத்து விவரமும் கொண்ட சுற்றுச்சூழல் பாதிப்பு மதிப்பீட்டு ஆய்வு

(d) பேரிடர் மேலாண்மை அறிக்கை மற்றும் அபாய மதிப்பீடு மற்றும் மேலாண்மை அறிக்கை;

(e) அங்கீகரிக்கப்பட்ட அமைப்புகளால் (1:4000 என்ற ஒப்பளவில்) வரையருக்கப்பட்டுள்ள உயர் ஓத அலைக்கோடு (HTL) மற்றும் தாழ் ஓதஅலைக்கோடு (LTL) வரிசைகளை சுட்டிக்காட்டும் கடற்கரை ஒழுங்குமுறை மண்டல வரைபடம்

(f) மேலே (e)-யில் குறிப்பிடப்பட்டுள்ள வரைபடத்தின்மீது மேற்போருத்தப்பட்ட திட்ட வரைபடம்.

(g) திட்ட இருப்பிடத்தைச் சுற்றி 7 கி.மீ சுற்றளவை உள்ள்டக்கிய கடற்கரை ஓழுங்குமுறை மண்டல (CRZ) வரைபடம்.

(h) CRZ -I, CRZ- II, CRZ- III CRZ- IV பகுதிகளும், மேலும் பிறவேறு அறிவிக்கப்பட்ட எளிதில் பாதிக்கப்படக் கூடிய சுழல் மண்டலப் பகுதிகளும் குறிக்கப்பட்டிருக்கும் கடற்கரை ஓழுங்குமுறை மண்டல CRZ வரைபடம்.

(i) கழுவுநீர், திடக் கழிவுகள், சாக்கடை போன்ற இதர கழிவுகளை வெளியேற்ற இருக்கும் திட்டங்கள், தொடர்புடைய மாநில மாசு கட்டுப்பாட்டு வாரியம் அல்லது யூனியன் பிரதேச மாசு கட்டுப்பாட்டு செயற்குழுக்களின் மறுப்பிலா சான்றிதழ்.

(j) தாக்கல் செய்யப்பட்ட மேற்குரிபிட்டுள்ள ஆவணங்களை தொடர்புடைய கடற்கரை மண்டல ஒழுங்குமுறை ஆணையம், அங்கீகரிக்கப்பட்ட கடற்கரை

மண்டல ஒழுங்குமுறை திட்டத்திற்கு இணக்கமாக உள்ளதா என்றும் CRZ அறிவிப்பானைக்கு உட்பட்டுள்ளதா என்பதை ஆய்ந்து, பெறப்பட்ட 60 நாட்களுக்குள் பரிந்துரைகளை சமர்பிக்க வேண்டும்.

**5. கடற்கரை மண்டல மேலாண்மை செயல்திட்டங்கள் (CZMP) தயாரித்தல்:**

i) உரிய மாநில அரசுகள் அல்லது யூனியன் பிரதேச அரசுகள் வழியாகத் தயாரிக்கப்பட்ட CZMPகளை மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம்( MoEF) பெற்றுக்கொள்ளலாம்.

ii) CZMPகள் நிலையான கடற்கரை மேலாண்மைத் தேசிய மையம் (NCSCM - National Centre for Sustainable Coastal Management) உள்ளிட்ட அளவிலான அனுபவம் வாய்ந்த அறிவியல் கழகங்களையும், ஆய்வுமையங்களையும், அணுகி அவற்றின் துணையோடு சம்பந்தப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த மக்களையும் கலந்தாலோசித்து, அவர்கள் கருத்துகளையும் கேட்டறிந்து அதனளவில் மாநில அரசு அல்லது யூனியன் பிரதேச அரசுகளால் தயாரிக்கப்பட வேண்டும்.

iii) CZMPமூலம் நாட்டின் கடற்கரையோரமெங்கும் அமைந்துள்ள SoL வழியாக பேரலைகள், அலைகள், கடல் மட்ட உயர்வு மற்றும் கடற்கரை மாற்றங்கள் ஆகிய அனைத்தையும் கணக்கில் எடுத்துக் கொண்ட அளவில், இடர்கோடு வரையறுக்கப்பட வேண்டும்.

iv) பேரலைகள், அலைகள் மற்றும் கடல் மட்ட உயர்வால் அடுத்த 50 மற்றும் 100 ஆண்டுகளில் ஏற்பட உள்ள வெள்ள அபாயங்களை எடுத்துக்காட்டும் பொருட்டு, HTL வரிசையில் இருந்து 0.5 மீட்டரில் இருந்து 7 கி.மீ வரை கடலோரப் பகுதிகளின் வரைபடம் உருவாக்கப்பட வேண்டும். முந்தைய செயற்கைக் கோள் படங்களுடன் தற்போதைய செயற்கைக் கோள் படங்களை ஒப்பிட்டு பல்வேறு வரலாற்றுத் தகவல்கள் அடிப்படையில் கடற்கரை கோடு மாற்றங்கள் வரையறுக்கப்பட வேண்டும்.

v) இடர்க்கோடு வரைபடம் பருண்மை அலகிலான நிலப் பயன்பாட்டுத் திட்டங்களுக்காக 1:25,000 அலகிலும், உள்ளூர் மட்ட பயன்பாட்டிற்கு 1:10,000 என்ற அலகிலும் உருவாக்கப்பட வேண்டும். இவ்வாறு கடற்கரைப் பகுதிகளுக்கான நிலப்பயன்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்படும்போது இடர்கோடு கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படவேண்டும்.

vi) இந்த அறிவிப்பாணையின் இணைப்பு 1இல் கொடுக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்கள் அடிப்படையில் ஒவ்வொரு மாநிலத்துக்கான ஒழுங்குமுறை மண்டலங்களை (CRZ) வகைப்படுத்துதல் மற்றும் தமது மாநிலங்களுக்கான கடற்கரை மண்டல மேலாண்மைத் திட்டங்களை (CZMP) அந்தந்த மாநில/ யூனியன் பிரதேச அரசுகள் இந்த அறிவிப்பாணை வெளியான ஓராண்டுக்குள் உருவாக்கப்பட வேண்டும். இவ்வாறு தயாரிக்கப்படும் CZMPகளை அந்தந்த மாநில CZMAகளிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். தொடர்புடைய ஆணையங்கள் இதற்கு நல்ல முறையில் விளம்பரம் செய்து பொதுமக்கள் அறியச் செய்வதுடன், சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம் 1986 விதிகளின்படி பயனாளர் கருத்துகளையும் கோரவேண்டும்.

vii) இந்த வரைவு CZMPதிட்டங்களை தொடர்புடைய மாநில/யூனியன் பிரதேச அரசுகள் சம்பந்தப்பட்ட CZMAக்களிடம்,. 1986ஆம் ஆண்டைய சுற்றுச்சூழல்(பாதுகாப்புச்) சட்டத்தில் வகுத்துரைக்கப்பட்டுள்ள வழிமுறைகள், விதிமுறைகளோடு பொருந்தும் அளவிலான உரிய கலந்தாலோசனைகள் மற்றும் பரிந்துரைகள் உள்ளிட்ட அளவில், மதிப்பாய்வுக்காகச் சமர்ப்பிக்கவேண்டும்

viii) மாநில அரசின் அல்லது யூனியன் பிரதேச அரசின் CZMA தன்னிடம் சமர்ப்பிக்கப்பட்ட வரைவை அவ்வாறு மதிப்பாய்வு செய்த பின் தனது பரிந்துரைகளுடன், பயனாளிகள், திட்டத்தின் கீழ் வரும் பொதுமக்கள் ஆகியோரின் கருத்துகளைக் கேட்டறிந்து அவர்களுடைய

கருத்துகள், ஆலோசனைகள், ஆட்சேபங்களையும் இடம்பெற செய்த அளவில் ஆறு மாத காலத்திற்குள் சம்பந்தப்பட்ட வரைவை மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்தின் கையில் சமர்ப்பிக்கவேண்டும்.

ix) அதன் பிறகு மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம் முழுநிறைவான அளவில் பெறப்பட்ட மேற்படி CZMP திட்டங்களைப் பரிசீலனை செய்து 4 மாத கால அவகாசத்திற்குள் அனுமதியளிக்க வேண்டும்;

x) அறிவிப்பாணையில் பட்டியலிடப்பட்டுள்ள அனைத்து வளர்ச்சி-மேம்பாட்டுச் செயல்பாடுகளும் மாநில அரசு, யூனியன் பிரதேச நிர்வாகம் மற்றும் உள்ளூர் அதிகார அமைப்பு அல்லது சம்பந்தப்பட்ட CZMP யின் வரைச்சட்டகத்திற்குள் பொருந்துவதான, தொடர்புடைய CZMA போன்ற உரிய அமைப்புகளால் இந்த அறிவிப்பாணையில் கண்டுள்ள வழிவகைகளின்படி ஒழுங்கமைக்கப்படவேண்டும்.

xi) பொதுவாக CZMPக்கள் 5 வருடங்களுக்கு முன்பாக மறுபரிசீலனைக்குட்படுத்தப்படவோ, மாற்றியமைப்படவோ மாட்டாது. ஐந்து வருடங்களுக்குப் பிறகு தொடர்புடைய மாநில/ யூனியன் பிரதேச அரசுகள் மேற்குறிப்பிட்ட வழிமுறைகளைப் பின்பற்றி இந்த வரைபடங்களை மாற்றியமைக்க முன்வரலாம்.

xii) 1991 ஆம் ஆண்டைய CRZஇன் அங்கீகாரத்தை ஏற்கனவே பெற்றுள்ள CZMPக்கள் 24 மாதங்களுக்கு செயலாக்கம் பெற்றதாய் இயங்கிவரும். குறிப்பான அறிவிப்பாணையின் மூலம் , அதற்காக வரையறுத்துத் தரப்படும் நிபந்தனைகள், விதிமுறைகளுக்கு ஏற்ப, மட்டுமே இந்த செல்லுபடியாக்கக் கால வரையறை மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்தால் நீட்டிக்கப்படலாம்.

6. (CRZ) அறிவிப்பாணை 2011 ஐ நடைமுறைப்படுத்துதல்:

a) இந்த அறிவிப்பாணையில் வகுத்துரைக்கப்பட்டுள்ள ஷரத்துகளை நடைமுறைப்படுத்துதல் மற்றும் கட்டாயமாக்குதல் தொடர்பாய் உள்ள அதிகாரங்கள் – அறிவிப்பாணையிலேயேலே இடம்பெற்றிருப்பவை அல்லது அதன் விதிமுறைகளோடு பொருந்தும் அளவில் தரப்பட்டிருப்பவை 1986ஆம் ஆண்டைய சுற்றுச்சூழல்(பாதுகாப்பு) சட்டத்தின்கீழ் மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம், மாநில அரசு மற்றும் யுனியன் பிரதேச அரசு நிர்வாகத்திற்குட்பட்ட NCZMA மற்றும் SCZMAக்களின் கையில் இருக்கின்றன:

b) உச்ச நீதிமன்றம் 1993ஆம் ஆண்டின் 664 ஆவது 'ரிட்' மனு குறித்துப் பிறப்பித்த உத்தரவாணையின்படி, NCZMA மற்றும் SCZMAக்களின் உருவாக்கம், தொகுப்பாக்கம், கால நிர்ணயம், அதிகார வரம்புகள் ஆகியவை ஏற்கனவே மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளன.

c) SCZMAக்களின் அமுலாக்கம் மற்றும் கண்காணிப்பு ஆகிய அனைத்திற்கும் மாநில அரசு மற்றும் யூனியன் பிரதேச அரசுகளைச் சார்ந்த CZMAக்களே முழுப் பொறுப்பேற்கின்றன. இந்தப் பணியில் அவைகளுக்கு உதவி செய்ய மாநில அரசுகளும் யூனியன் பிரதேச அரசுகளும் மாவட்ட அளவிலான குழுமங்களை அமைக்கலாம். அவை சம்பந்தப்பட்ட மாவட்ட நீதிபதியின் தலைமையில் இயங்கிவரும். அதில் மீனவ சமுதாயம் உள்ளிட்ட அளவில், உள்ளூரின் வழிவழியாக இருந்துவரும் மக்கட்சமுதாயங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் குறைந்தபட்சம் மூன்று நபர்களாவது இடம்பெற்றிருக்க வேண்டும்.

d) வழிவழியாக இருந்துவரும் மக்கட்சமூகங்களின் குடியிருப்புகள் – மீனவ சமூகம், பழங்குடியினத்தவர் உட்பட – 1991 ஆம் ஆண்டைய CRZ அறிவிப்பாணையின்படி அனுமதிக்கப்பட்டவையே, என்றாலும், மேற்குறிப்பிட்ட அறிவிப்பாணையின் கீழ்

அதிகாரப்பொறுப்பிலுள்ள அதிகாரிகள், அதிகார அமைப்புகள் ஆகியவற்றிடம் முறையான அனுமதி பெறாத மக்கட்சமூகங்கள் உரிய யூனியன் பிரதேச CZMAக்களின் பரிசீலனைக்கு உடபடுத்தப்பட்டு, கீழ்க்கண்ட நிஅந்தையின் பேரில் அந்த குடியிருப்புகள் ஒழுங்கமைக்கப்படவேண்டும்:

i. இவை எந்தவிதமான வர்த்தகச் செயல்பாடுகளுக்கும் பயன்படுத்தப்படலாகாது.
ii. இவை வழிவழியாக இருந்துவரும் க்டலோர மக்கட்சமூகமல்லாத பிறருக்கு விற்கப்படவோ கைமாற்றித்தரப்படவோ கூடாது.

7. கடற்கரை ஒழுங்குமுறை மண்டலங்கள் (CRZ) வகைப்படுத்தல்:-கடற்கரைப் பகுதிகள் மற்றும் கடல் நீரைப் பாதுகாக்கவும், பராமரிக்கவும் கடற்கரை ஒழுங்குமுறை மண்டலங்கள் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தப்படுகின்றன.

*i. கடற்கரை ஒழுங்குமுறை மண்டலம் (CRZ) I:*

*A. கடற்கரை ஒருமைப்பாட்டைப் பாதுகாப்பதில் முக்கியப் பங்காற்றும் சுற்றுச்சூழல் ரீதியான நுண்ணியஅம்சங்களும் நிலஉயிரின அம்சங்களும் இணைந்த பகுதிகள் இந்த கடற்கரை ஒழுங்குமுறை மண்டலம் (CRZ)-I பகுதியில் உள்ளடங்குபவை:*

*a. அலையாத்திக் காடுகள். 1,000 சதுர மீட்டர் பரப்புக்கு அதிகமான அலையாத்திக் காடுகளுக்கு 50 மீ அளவிலான மென் பாதுகாப்பு வளையம் அமைக்கப்பட வேண்டும்.*
*b. பவளங்கள், பவளப்பாறைகள் மற்றும் பல்லுயிர்ப் பெருக்கத்தோடு இணைந்த பகுதிகள*
*c. மணற்குன்றுகள், தேரிகள்*
*d. மண்ணியல் சிறப்பம்சம் கொண்ட சேற்றுப் பகுதிகள்*
*e. தேசியப் பூங்காக்கள், கடல் பூங்காக்கள், பறவைகளின் சரணாயலங்கள், வனச் சரணாலயங்கள் மற்றும் வன விலங்குகள் பாதுகாப்பு சட்டம் 1971, வனப்பாதுகாப்பு சட்டம் 1980, சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டம் 1986 ஆகிய சட்டங்களின் கீழ் பாதுகாப்பு அளிக்கப்பட்ட பகுதிகள், உயிர்மண்டலங்கள்*
*f. உப்பளங்கள்*
*g. ஆமைகள் குஞ்சு பொரிக்கும் பகுதிகள்*
*h. குதிரைக் கால நண்டுகள் வாழ்விடங்கள்*
*i. கடல் புல் படுகை*
*j. பறவைகள் கூடு கட்டும் இடங்கள்*
*k. தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகள், பாரம்பரிய இடங்கள்*

B. உயர் பேரலை கோடு மற்றும் தாழ் பேரலை கோடுகளுக்கு இடைப்பட்ட பகுதி

ii. கடற்கரை ஒழுங்குமுறை மண்டலம் (CRZ) II

கடற்கரை எல்லைக்கோடு கோடு வரையிலோ அல்லது கடற்கரை வரிசைக்கு நெருக்கமாகவோ வளர்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்ட பகுதிகள்.

*விளக்கம்:* நகர் மன்றத்துக்கு உடப்பட்ட பகுதிகளும், நகர்ப்புறம் என்று புதிதாக அறிவிக்கப்பட்ட பகுதிகளும் *'மேம்படுத்தப்பட்ட பகுதிகள்'* என்று வரையறுக்கப்படுகிறது. ஏற்கனவே தொடர்ந்து கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, மழைநீர் வடிகால் வசதிகள், இணைப்புச் சாலைகள், குடிநீர் வினியோக, கழிவுநீர் வடிகால் வசதிகள் போன்ற அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்பட்ட பகுதிகள் இவ்வாறு 'மேம்படுத்தப்பட்ட பகுதி'களாக அறிவிக்கப்படுகின்றன.

iii. கடற்கரை ஒழுங்குமுறை மண்டலம் (CRZ) III

முன்னர் குறிப்பிட்டுள்ள கடற்கரை ஒழுங்குமுறை மண்டலம் (CRZ) sI, II ஆகிய மண்டலங்களுக்கு உட்படாத, ஒப்புநோக்கின் அதிகம் பாதிக்கப்படாத பகுதிகள் இந்த வகைமைக்குள் அடங்கும். (வளர்ச்சிப் பணிகள் நடைபெற்ற மற்றும் நடைபெறாத) கிராமங்களை ஒட்டிய கடற்கரைப் பகுதிகளை இது உள்ளடக்கியுள்ளது. மற்றும்,முனிசிபல் எல்லைகளுக்கு உட்பட்ட அளவில் இடம்பெறும் பகுதிகளும் இதர சட்ட ரீதியாக வரையறுக்கப்பட்டுள்ள நகர்ப்புறப் பகுதிகளுக்கு உட்பட்ட அளவிலும் இருக்கும்படியான, போதுமான அளவு வளர்ச்சிபெறாத பகுதிகளும் இந்த வரையறக்குள் கொண்டுவரப்படுகிறது.

IV. கடற்கரை ஒழுங்குமுறை மண்டலம் (CRZ) IV

A. உயர் பேரலை கோட்டிலிருந்து கடலில் 12 கடல்மைல்கள் தூரம் வரையான நீர்ப்பரப்பு;

B. கடல் முகப்பில் இருந்து கடல் நீர் நிலப்பகுதியில் ஊடுருவிச் செல்லும் பேரலைகள் செல்வாக்குள்ள பகுதி. ஒரு மிக வறட்சியான காலம் எப்போதோ அப்போது ஆயிரம் துகள்களுக்கு 5 துகள்கள் என்ற அளவில் உப்புத்தன்மை எந்த நிலப்பகுதியில் உள்ளதோ அங்குவரை 'பேரலைகள் செல்வாக்குள்ள பகுதி' என வரையறை செய்யப்படுகிறது.

V. நெருக்கடிக்காளாகியுள்ள கடலோரச் சுற்றுச்சூழல் மற்றும் உள்ளூர் மக்கட்சமூகம் எதிர்கொண்டுவரும் சிரமங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் சிறப்புச் சலுகை தேவைப்படும் பகுதிகள்:

A

i மகாராஷ்டிரா மாநில அரசால் அறிவிக்கப்பட்ட 'கிரேட்டர்'(அகண்ட) மும்பை, நவி மும்பை ஆகிய நகர்ப்புற பகுதிகள்

ii கழிமுகங்கள், கடலில் இருந்து செல்லும் நீர் நிலைகள், அங்குள்ள தீவுகள் உள்ளிட்ட கேரள மாநில கடற்கரைப் பகுதிகள்

iii கோவா மாநிலக் கடற்கரைப் பகுதி

B மிக மோசமான அளவு பாதிப்புக்காளாகக்கூடிய அபாயநிலையிலுள்ள கடலோரப் பகுதிகள் (CVCA – CRITICALLY VULNERABLE COASTAL AREAS) –மேற்கு வங்கத்தில் உள்ள சுந்தர்வனப் பகுதி போன்றவை, மற்றும் 1986ஆம் ஆண்டைய சுற்றுச்சூழல்(பாதுகாப்புச்) சட்டத்தால் வாழ்க்கைச்சூழல் ரீதியாக மிகவும் நுண்மை வாய்ந்தவையாக அடையாளங்காணப்பட்டு மீனவ சமுதாயம் உட்பட கடற்கரை மக்கட்சமூகங்களின் பங்கேற்போடு நிர்வகிக்கப்பட்டுவரும் பகுதிகள்;

8. இந்த அறிவிப்பணையின்கீழ் கடற்கரை ஒழுங்குமுறை மண்டலங்களில் (CRZ) மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதற்கான விதிமுறைகள்;

i. பலதரப்பட்ட கடற்கரை ஒழுங்குமுறை மண்டலங்களில் (CRZ) மேற்கொள்ளப்படும் வளர்ச்சித்திட்ட அல்லது கட்டுமானப் பணிகள் கீழ்க்கண்ட விதிமுறைகளின் அளவில் உரிய CZMAவால் ஒழுங்கமைக்கப்படும்:

குறிப்பு : இதுமுதல், மெற்குறிப்பிட்ட ஒழுங்குவிதிகள், அவற்றின் பல்வேறு அம்சங்களைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் சொல் 19.2.1991 இல் செல்லுபடியாக்கம் பெற்ற (CRZ)இல் இந்த ஒழுங்குசிதிகளும், விதிமுறைகளும் இடம்பெற்றுள்ளன என்பதைக் குறிப்பதாக எடுத்துக்கொள்ளப்படவேண்டும்.

I. கடற்கரை ஓழுங்குமுறை மண்டலம் (CRZ) I

V. கீழ்க்கண்ட பணிகள் நீங்கலாக வேறு எந்த கட்டடங்களும் கடற்கரை ஓழுங்குமுறை மண்டலம் (CRZ) I பகுதிக்குள் எழுப்பப்பக்கூடாது.

a. அணுசக்தித் துறை தொடர்பான திட்டங்கள்
b. செய்தி/தகவல் பரிமாற்றக்கட்டமைப்புகள், ஒலியலைவரிசைகள் உட்பட, குழாய் பதித்தல், கன்வேயர் அமைப்பு, மின் போக்குவரத்து நிறுவுதல்
c. கடற்கரை ஓழுங்குமுறை மண்டலம் (CRZ) I -இல் அனுமதிக்கப்படும் நடவடிக்கைகளுக்குத் தேவையான வசதிகள்
d. வானிலையை முன்கூட்டியே அறிய உதவும் கருவியான வானிலை தொலை உணர் (Radar) கருவிகளை இந்திய வானிலை ஆராய்ச்சித் துறையினர் நிறுவுதல்.
e. பேரலைகள் இயக்கத்திற்கு பாதிப்பு ஏற்படாதவாறு, பேரலை வரிசைகளுக்கு இடைப்பட்ட பகுதியில் கட்டப்படும் கடல் அமைப்புகள், இணைப்புச் சாலைகள், தூண்கள் அமைத்தல்
f. நவி மும்பையில் அமைக்கப்படும் பசுமை வளாக விமான நிலையம் மற்றும் அது தொடர்பான நடவடிக்கைகள்

VI. HTL, LTL வரிசைகளுக்கு இடைப்பட்ட பகுதியாக இருந்தாலும் அப்பகுதி சுற்றுச் சூழல் முக்கியத்துவம் இல்லாத பகுதியாக இல்லை என்றால் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் அனுமதிக்கப்படும்.

a. பெட்ரோல் மற்றும் இயற்கை எரிவாயு கண்டுபிடுத்தல் மற்றும் துரப்பண நடவடிக்கைகள்
b. பகுதி 2 இல் குறிப்பிடப்பட்ட நடவடிக்கைகள்
c. தொடர்புடைய CZMAகளின் ஒப்புதல் பெற்ற பின்னர், உயிர்மண்டலப் பகுதியில் வாழும் மக்களுக்கான மருந்தகங்கள், பள்ளிகள், மழைக்கூடாரங்கள், பொதுக் கழிப்பிடங்கள், பாலங்கள், சாலைகள், மீன்பிடி துறைமுகங்கள், குடிநீர் வினியோகம், கழிவுநீர்க் கால்வாய்கள், மழைநீர் வடிகால்கள் அமைத்தல் ஆகிய நடவடிக்கைஅனுமதிக்கப்படுகின்றன. இந்த முக்கிய இடர் மண்டலத்தில் மேற்கூறிய வளர்ச்சிப் பணிகள் அனுமதிக்கப்படும்போது தேவையான பாதுகாப்பு அம்சங்களும் ஒருங்கிணைக்கப்பட வேண்டும்.
d. சூரிய ஒளியால் கடல் நீரை ஆவியாக்கி உப்பு தயாரிக்கும் உப்பளங்கள் அமைத்தல்
e. கடல் ஈரைக் குடிநீராக்கும் திட்டங்கள்
f. உணவு தானியங்கள், சமையல் எண்ணெய் மற்றும் உரம் போன்ற இடர் ஏற்படுத்தாத பொருட்களைச் சேமித்து வைத்தல்.
g. பேரலைகள் இயக்கத்துக்கு பாதிப்பு ஏற்படாதவாறு, பேரலை வரிசைகளுக்கு இடைப்பட்ட பகுதியில் கட்டப்படும் கடல் அமைப்புகள், இணைப்புச் சாலைகள், தூண்கள் அமைத்தல் ஆகிய நடவடிக்கைகள் அனுமதிக்கப்படும்.

II. கடற்கரை ஓழுங்குமுறை மண்டலம் (CRZ) II

i. தற்போது பயன்பாட்டில் உள்ள சாலைகள் (அல்லது CZMA களால் அங்கீகரிக்கப்பட்டுள்ள புதிய சாலைத் திட்டங்கள்) அல்லது தற்போது பயன்பாட்டில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட கட்டடங்கள் அல்லது இடர் வரிசையிலிருந்து நிலத்தை நோக்கிய பகுதியில் புதிய கட்டடங்கள் ஏற்படுத்திக்கொள்ள அனுமதி அளிக்கப்படுகிறது.

ii. அமலில் உள்ள உள்ளாட்சிகள், நகராட்சிகளின் ஒழுங்குமுறை விதிகளுக்கு – தரைப்பரப்பு அளவுக்குரிய அளவீடுகள் அல்லது தரைப்பரப்பு அளவு விகிதாச்சாரங்களுக்கு ( Floor Space Index/ Floor Area Ratio) - இந்தப் புதிய கட்டடங்கள் உட்பட்டதாக இருக்க வேண்டும். தற்போதுள்ள கடல் நோக்கிய சாலைகளின் நிலம் நோக்கிய பகுதியாக இருந்தாலும் எந்தவிதமான புதிய கட்டடங்களும் அனுமதிக்கப்பட மாட்டாது.

iii. அதிகாரபூர்வ கட்டிடங்களின் மறுகட்டமைப்பு அதன் தற்போதைய பயன்பாட்டில் மாற்றமில்லாத அளவிலும் அமுலிலுள்ள தரைப்பரப்பு அளவுவிகிதங்கள், விகிதாச்சாரங்களுக்கு உட்பட்ட அளவிலும் அனுமதிக்கப்படும்

iv. பெட்ரோலியப் பொருட்களையும், திரவநிலையிலுள்ள இயற்கை எரிவாயுவையும் பெறுதல், பத்திரப்படுத்திவைத்தல் முதலிய நடவடிக்கைகளுக்கான வசதிகள், அதேபோல் திரவநிலையிலுள்ள இயற்கை எரிவாயுவை மீண்டும் வாயுநிலைக்கு மாற்றுவதற்கான வசதிகளும் அறிவிப்பாணையின் பத்தி 3இன் உப-பிரிவு 11 இல் காணப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்ட அளவில் அனுமதிக்கப்படும்.

v. உப்புநீரை நன்னீராக மாற்றும் தொழிற்சாலைகளும், தொடர்புடைய வசதிகளும்.

vi. சமையல் எண்ணெய், ரசாயன உரங்கள் மற்றும் உணவுதானியங்கள் போன்ற அறிவிப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள அபாயமற்ற சரக்குகளைத் துறைமுகங்களில் சேமித்துவைத்தல்;

vii. மரபு சாரா எரிசக்தி ஆதாரங்களிலிருந்து எரிசக்தியை உற்பத்தி செய்துகொள்ளவும், தொடர்புடைய நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் வசதிகள்.

III. கடற்கரை ஒழுங்குமுறை மண்டலம் (CRZ)- III

1. கடல்முகத்தைப் பொறுத்த அளவில் தரைநோக்கிய பகுதியில் உயர் பேரலை வரிசையில் HTL இருந்து 200 மீ. வரையான பகுதி, மற்றும் அலையழுத்தத் தாக்கம் கொண்ட நீர்ப்பரப்புகள், நீர்நிலைகளின் போக்கில் 100 மீ வரையான பகுதிகள் 'மேம்பாடு இல்லா மண்டல'மாக வரையறைக்கப்படுகின்றன. இங்கு எந்தவிதமான வளர்ச்சிப்பணிகளும் அனுமதிப்படுவதில்லை.

   i அறிவிக்கப்பட்ட துறமுக எல்லைகளுக்குள் அமையும் இத்தகைய பகுதிகளுக்கு மேம்பாடு இல்லா மண்டல'(NDZ) விதிமுறைகள் செல்லுபடியாகாது.

   ii இந்த அறிவிப்பாணையின் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு அவசியமான வசதிகள் மற்றும் ஏற்கனவே பயன்படுத்தப்பட்டு வரும் கட்டடங்களில் தற்போதைய தரை வெளி அலகு/ தரை பரப்பு விகிதம் (FSI) எந்த மாற்றமும் செய்யாமல் மேற்கொள்ளப்படும் பழுதுநீக்கும் நடவடிக்கைகள் மற்றும் புதுப்பித்தல் நடவடிக்கைகள் தவிர வேறு கட்டுமானப் பணிகள் அனுமதிக்கப்பட மாட்டாது. எனினும், உயர்பேரலைக் கோட்டிலிருந்து 100-200 மீட்டர்களுக்கு இடைப்பட்ட தொலைவுள்ள் பகுதிகளில் மரபுவழியான கடற்கரை மக்கட்சமூகங்கள் – மீனவர்கள் உட்பட குடியிருப்புகளை ஏற்படுத்திக்கொள்ள அனுமதி வழங்கப்படும். உரிய மாநில மற்று யூனியன் பிரதேச அரசுகள் மீனவ சமுதாயம் உள்ளிட்ட அளவில் மரபுவழியான கடற்கரை மக்கட்சமூகங்களின் கருத்துகளைக் கேட்டறிந்து, அவர்களோடு கலந்தாலோசித்து அதன்பேரில் ஒரு முழுநிறைவான செயல்திட்டத்தைத் தீட்டி, அதில் பேரிடர்

மேலாண்மை வழிவகைகள், சுத்தம்- சுகாதாரம் முதலிய தேவையான வழிவகைகளை உள்ளிணைத்து இந்த செயல்திட்டத்தை உரிய மாநில அல்லது யூனியன் பிரதேச CZMA அல்லது NCZMA மூலம் மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை(MoEF)க்கு அனுப்பிவைத்து ஒப்புதலைப் பெற்ற பின் மேற்படி அனுமதி வழங்கப்படும்.

iii இருந்தபோதும், கீழ்க்காணும் செயல்பாடுகள் NDZ இல் அனுமதிக்கப்படலாம்.

a. விவசாயம், தோட்டம் பயிரிடுதல், பூங்காக்கள் அமைத்தல், காடு வளர்த்தல், விளையாட்டுத் திடல்கள்
b. அணுஆற்றல் துறை திட்டங்கள்
c. அரிய கனிமங்களை அகழ்ந்தெடுத்தல்
d. கடல் நீரிலிருந்து உப்பு எடுத்தல்
e. இணைப்பு II-ல் குறிப்பிட்டுள்ளது போல் பெற்றோலியப் பொருட்கள் மற்றும் திரவ நிலை இயற்கை எரிவாயுவை பெருவதற்கு, சேமித்து வைபதற்கு, தேவையான வசதிகளை அமைத்தல்
f. இணைப்பு II-ல் குறிப்பிட்டுள்ள கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு திரவமாக்கப்பட்ட நிலையில் உள்ள இயற்கை எரிவாயுவை மீண்டும் வாயுநிலைக்குக் கொண்டுவருவதற்குத் தேவையான வசதிகள் அமைத்தல்
g. மரபுசாரா எரிசக்தி உற்பத்திவழிவகைகளைக் கையாண்டு எரிசக்தி/மின்சக்தி உற்பத்தி செய்யும் வசதிகள்.
h. கடல் நீரை குடிநீராக்கும் திட்டங்கள்
i. வானிலை முன்னறியும் சாதனமான வானிலை தொலை உணர் (Radar) கருவிகளை நிறுவுதல்
j. மருந்தகங்கள், பள்ளிகள், மழைக்கூடாரங்கள், பொதுக் கழிப்பிடங்கள், பாலங்கள், சாலைகள், குடிநீர் வினியோகம், வடிகால் வசதி, கழிவு நீர் வெளியேற்றம், பிணமெரிக்கும் இடம், இடுகாடுகள், மற்றும் துணை மின்மாற்றி நிலையங்கலை அங்கு வாழும் மக்களுக்காக அமைக்க
k. தொடர்புடைய CZMAகளின் ஒப்புதல் வழங்கலாம்
l. மழைநீர் வடிகால்கள், கழிவுநீர்க் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் திணை சார்பு அமைப்புகளை, தொடர்புடைய மாசு கட்டுப்பாடு வாரியம் அல்லது செயற்குழுவிம் ஒப்புதலோடு அமைக்கப்படும்
m. மீன் உளர்ப்பு தளம், ஏலம் விடும் கூடம், வலை பின்னும் தளம், பாரம்பரிய படகு கட்டும் தளங்கள், உறைநீர் தொகுதிகள், உறைநீர் கட்டிகளை உடைக்கும் தொகுதிகள், மீன் பதன வசதிகள் போன்ற வசதிகளை அமைத்தல்
n. நவி மும்பையில் மட்டும் பசுமை தள விமான நிலையம் அமைத்தல்

2. HTL வரிசையில் இருந்து 200 மீட்டருக்கும் 500 மீட்டருக்கும் இடைப்பட்ட பகுதி
கீழ் காணும் செயல்கள் மேற்குறிப்பிட்ட இடங்களில் அனுமதிக்கப்படுகிறது

i. இங்கு, மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்திடம் முன் அனுமதி பெற்றுள்ள சுற்றுலாப் பயணிகள் மற்றும் வெளியூஊர் ஆட்கள் தற்காலிகமாகத் தங்குவரற்கானகடற்கரை விடுதிகள், உணவகங்கள் இணைப்பு 3 இல் குறிப்பிட்ட வழிகாட்டுதல்களின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு அனுமதிக்கப்படும்.

ii. இணைப்பு 2 இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி பெட்ரோலியப் பொருட்கள் மற்றும் திரவ எரிவாயு ஆகியவற்றை கப்பகளில் இறக்குதல் மற்றும் இருப்பு வைத்தல்

iii. பத்தி 3, உப-பத்தி (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைக்கு உட்பட்டு திரவமாக்கப்பட்டுள்ள இயற்கை எரிவாயுவை மீண்டும் வாயுநிலைக்குக் கொண்டுவரும் நடவடிக்கைகள்

iv. எண்ணெய், உரம், உணவு தானியம் போன்ற அபாயமற்ற சரக்குகளை அறிவிக்கப்பட்ட துறைமுகங்களில் இருப்புவைத்தல்

v. கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம், தொடர்புடைய செயல்பாடுகள்.

vi. மரபுசாரா எரிசக்தி உற்பத்தி வழிவகைகளின் மூலம் எரிசக்தி உற்பத்தி செய்தல்.

vii. மீனவ கிராமங்கள், குப்பங்கள் போன்ற பாரம்பரிய உரிமைகளும், பழக்க வழக்கங்களும் கொண்ட பகுதிகளில் குடியிருப்பு வீடுகள் கட்டுவதற்கும், புதுப்பிப்பதற்கும் அனுமதியளிக்கப்படுகிறது. இத்தகைய புதிய குடியிருப்பு வீடுகள் உள்ளூர் கிராமப்புற மற்றும் நகர்ப்புற கட்டுமானத் திட்டப்பணி விதிமுறைகளுக்கு உட்பட்ட அளவில் அமைய வேண்டும். வீடுகள் இரண்டுமாடிகளுக்கு மிகாமல் மொத்த உயரம் 9 மீட்டர்களுக்கு மேல் போகாதவண்ணம் அமைய வேண்டும்.(தரைத்தளம்+ முதல் மாடி)

viii. மழைக்கூடாரங்கள், பொதுக் கழிப்பிடங்கள், பாலங்கள், சாலைகள், மீன்பிடி துறைமுகங்கள், குடிநீர் வினியோகம், கழிவுநீர்க் கால்வாய்கள், மழைநீர் வடிகால்கள், சாலைகள், பாலங்கள் ஆகிய நடவடிக்கைகளை தொடர்புடைய மாநில/ யூனியன் பிரதேச அரசுகளால் அங்கிகரிக்கப்பட்ட அமைப்புகள் மூலம் அனுமதிக்கப்படலாம். மேலும், உள்ளூர் மக்கள் குடியிருப்புகளுக்கான மருந்தகங்கள், பள்ளிகள் ஆகிய நடவடிக்கைகளை, கிராம உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேறு இடம் இன்றி, பெரும்பகுதியான ஊராட்சிப் பகுதி கடற்கரை ஒழுங்குமுறை மண்டல (CRZ) எல்லைக்குள்தான் இருக்கிறது என்கிற பட்சத்தில் இத்தகைய அதிகார அமைப்புகள் அனுமதிக்கலாம்.

ix. ஏற்கனவே இருந்துவரும் அதிகாரபூர்வ கட்டிடங்களை உப-பத்திகள் vii, viii, ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளபடி மாற்றியமைத்தல்; புதுப்பித்தல்.

x. நவி மும்பையில் மட்டும் ஏற்கனவே அனுமதியளிக்கப்பட்டுள்ள பசும்வெளி விமானநிலையம் அமைத்தல்.

IV. கடற்கரை ஒழுங்குமுறை மண்டலம் (CRZ) - IV பகுதிகளில்

உள்ளூர் மக்கட்சமூகங்களால் வழிவழியாகக் கடைப்பிடிக்கப்பட்டுவரும் மீன்பிடி வழிமுறைகள் மற்றும் தொடர்புடைய செயல்பாடுகள் தவிர்த்த அளவில், கடல்நீர்ப்பகுதி மற்றும் அலையழுத்தத் தாக்கமுடைய நீர்நிலைகளை பாதிக்கக்கூடிய நடவடிக்கைகள், உரிய அளவாகக் கட்டுப்படுத்தப்படும்;

a. சுத்திகரிக்கப்படாத ஆலைக் கழிவுகள், ரசாயனக் கழிவுகள், கப்பல் கழுவும் அசுத்தங்கல். பறந்துபடரும் சாம்பல் துகள், கடல் சார் மீன்வளர்ப்புச் செயல்பாடுகளால் வெளியேற்றப்படும் கழிவுகள் முதலிய எதுவும் இந்தப் பகுதியில் வெளியேற்றப்படவோ, குவித்துவைக்கப்படவோ கூடாது. கடற்கரை கிராமப்புறப் பகுதிகள் மற்றும் நகர்ப்புறப் பகுதிகளிலிருந்து சேகரமாகும் கழிவுகளை அகற்றவும், நேரிய முறையில் கையாளவும் தேவையான முழுநிறைவான ஒரு செயல்திட்டம், வழிவழியாக இருந்துவரும் மீனவ சமுதாயங்கள் மற்றும் கடற்கரை மக்கட்சமூகங்கள் ஆகியவை உள்ளிட்ட அளவில், சம்பந்தப்பட்ட பயனாளிகளின், அவ்வப்பகுதியைச் சார்ந்த மக்கட்சமூகத்தின்

கருத்துகளையும், ஆலோசனைகளையும் கேட்டறிந்து ஒரு வருட காலத்திற்குள் உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படவேண்டும்.

b. எண்ணெய் மற்றும் வாயுசார்ந்த பரிசோதனைகள், அகழ்வுகள், சுரங்க வேலை, படகுவீடுகள் மற்றும் கப்பல் கட்டும் தொழில் மூலம் ஏற்படக்கூடிய மாசுகள்.

c. உள்ளூர் சமுதாயங்களால் மேற்கொள்ளப்படும் மரபான மீன்பிடி தொழில் மற்றும் அது தொடர்பான நடவடிக்கைகளுக்கு கட்டுப்பாடுகள் இல்லை.

V சிறப்புச் சலுகைகள் தேவைப்படும் பகுதிகள்

1. கிரேட்டர் மும்பையின் நகராட்சிப் பரப்பெல்லைக்குள் இடம்பெறும் கடற்கரை ஓழுங்குமுறை மண்டல (CRZ) பகுதிகள்

i சுத்திகரிக்கப்படாத ஆலைக் கழிவுகள் மற்றும் திடக் கழிவுகளைக் கலப்பதால் அலையாத்திக் காடுகள் அழிப்பு, கடற்கரை நீர், கழிமுகங்கள், நன்னீரோடைகள் மாசு படுதல் போன்ற சுற்றுச்சூழல்பிரச்சனைகளைக் கருத்தில் கொண்டும், ஏழை மக்கள் அத்தியாவசிய தேவைகளான நாகரிகமான வீட்டு வசதியை ஏற்படுத்துதல் போன்ற தேவை இருப்பதாலும் மும்பை மற்றும் நவி மும்பை ஆகிய நகரப்பகுதிகளுக்கு சிறப்புச் சலுகைகளை மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் வழங்குகிறது. மும்பை மற்றும் நவி மும்பை பகுதிகளின் கீழ் வரும் கடற்கரை ஓழுங்குமுறை மண்டலங்களில் (CRZ) மேற்கொள்ளப்படும் வளர்ச்சி நடவடிக்கைகள் கீழ்க்கண்டவாறு ஒழுங்குமுறைப் படுத்தப்படுகின்றன:-

A. அறிவிப்பாணையின் பத்தி 7இன் உப-பத்தி(I)இல் சுட்டிக்காட்டப்பட்டபடி கடற்கரை ஓழுங்குமுறை மண்டலம் (CRZ) I கீழ்க்கண்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்:

a. கிரேட்டர் மும்பை நகர வளர்ச்சித் திட்டங்களில் அங்கீகரிக்கப்பட்டுள்ள சாலைகள், இணைப்புச் சாலைகள், தொலைந்துபோன இணைப்புச் சாலைகள் அமைத்தல் போன்ற நடவடிக்கைகள், அந்த நடவடிக்கைகளால் பேரலை இயக்கத்துக்கு இடையூறு இல்லாமல், அவ்வாறு கட்டப்படலாகும் சாலைவழிகள் அலது இணைப்புச் சாலைகளின் தரைநோக்கிய பகுதியில் (CRZ) IIஇனால் கிடைக்கும் எந்தவிதமான அனுகூலங்களும் இல்லாத அளவில்,, கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்ட அளவில், அனுமதிக்கப்பட்டுள்ளன:

i அலையாத்தி மரங்கள் அமைந்த பகுதிகள் அனைத்தும் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதிகளாக வரைபடத்தில் குறிக்கப்பட வேண்டும். அத்தகைய பகுதிகளைப் பேணிப் பராமரிக்கவும், பாதுகாக்கவும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

ii மேற்குறிப்பிட்ட கட்டுமானப் பணிகளின் போக்கில் அழிக்கப்பட்ட/ வெட்டப்பட்ட அலையாத்தி மரங்களைப் போல் ஐந்து மடங்கு புதிதாக நடப்பட வேண்டும்.

B. கடற்கரை ஒழுங்குமுறை மண்டலப் பகுதிக்கு வெளியே திடக்கழிவுகளை அகற்றுவதற்கான/கொட்டுவதற்கான இடங்கள் கண்டறியப்பட்டு அதன்பிறகு இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை, இத்தகைய ‘ஏற்கனவே இருந்துவரும்’ ‘திடக்கழிவு வெளியேற்றப் பகுதிகள் கடற்கரை ஒழுங்குமுறை மண்டலப் பகுதிகளுக்கு வெளியே உரிய அளவாக மாற்றியமைக்கப்பட வேண்டும்.

III. கடற்கரை ஓழுங்குமுறை மண்டலம் (CRZ) II பகுதிகளில்

a. இப்பகுதிகளில் மேற்கொள்ளப்படும் மேம்பாட்டு, மறுமேம்பாட்டு நடவடிக்கைகள் அனைத்தும் இந்த அறிவிப்பாணையில் குறிப்பாக வேறுவிதமாகக் குறிப்பிடப்பட்டிருந்தாலொழிய மற்றபடி, 19.02.1999 அன்று வெளியிடப்பட்ட அறிவிப்பாணை வெளியிடப்பட்ட நாளிலிருந்து அமலில் இருந்துவரும் நகர மற்றும் ஊரக வளர்ச்சித் திட்டங்களில் வகுக்கப்பட்டிருந்த விதிமுறைகளுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.

b. குடிசைப்பகுதி புணரமைப்புத் திட்டங்கள்

1. மத்திய மும்பைப் பகுதியில் பெரிய அளவில் குடிசைப்பகுதிகள் திரள்திரளாக அமைந்திருக்கின்றன. இங்கே லட்சக்கணக்கான மக்கள் வசித்துவருகிறார்கள். இங்கே அடிப்படைவசதிகள் கூட இல்லாத அவலநிலை நிலவுகிறது. சுத்தம்-சுகாதாரத்தைப் பேணவேண்டிய பொறுப்பிலுள்ள அதிகார அமைப்புகள் இந்த அடிப்படை உள்கட்டுமானவசதிகளை - மின்வசதி, தண்ணீர், சாலைகள், கழிவகற்றும் வழிவகைகள் போன்றவை - வழங்க இயலாத நிலை. காரணம், இந்தச் சேரிகள் திடீர்திடீரென நெரிசலாக முளைத்தெழுகின்றன. கடலோரப்பகுதிகளிலுள்ள குடிசைப்பகுதிகள் புயல், ஆழிப்பேரலை போன்ற இயற்கைச் சீற்றங்களின்போது அதிக அபாயத்திற்கு ஆளாகக்கூடியவையாய் உள்ளன. இவ்வகை இயற்கைச் சீற்றங்களில் சிக்கிக்கொண்டவர்களைக் காப்பாற்றுவதோ, அவர்களுக்கு உரிய நிவாரணம் வழங்குவதோ, அவர்களை அந்த அபாயகரமான இடங்களிலிருந்து அகற்றுவதோ மிகுந்த சிரமம் தருவதாக உள்ளது.

2. குடிசைவாழ்மக்களுக்கு மரியாதையும், பாதுகாப்பும் மிக்க வாழ்க்கையை உறுதிப்படுத்துவதற்கு மாநில அரசு குடிசைப்பகுதி மறுசீரமைப்புத் திட்டங்களை நேரடியாகவோ அல்லது அதன் கீழுள்ள மகராஷ்டிரா வீட்டுவசதி மற்றும் பகுதி மேம்பாட்டு ஆணையம், ஷிவ்சாஹி புனர்வாஸன் ப்ரகல்ப் லிமிடட், மூலமாகவோ, மும்பை மாநகர்ப்பகுதி மேம்பாட்டு ஆணையம், அன்னபிற அமைப்புகள் வழியாகவும் செயல்படுத்தலாம்.

   இத்தகைய நலத்திட்டங்களை முன்னெடுக்கும்போது பின்வரும் விதிமுறைகள் பின்பற்றப்படவேண்டியது அவசியம்:

   i இத்தகைய நலத்திட்டங்கள் அரசால் நேரடியாக மேற்கொள்ளப்படலாம். அல்லது, அரசு மற்றும் தனியார் துறைகளின்/அமைப்புகளின் ஒருங்கிணைந்த செயல்பாடாகவும் மேற்கொள்ளப்படலாம். எனில், இத்தகைய செயல்திட்டங்களில் மாநில அரசு மற்றும் அதன் துணை அதிகார அமைப்புகளின் பங்கு 51% ற்குக் குறைவாக இருக்கலாகாது.

   ii தரைப்பரப்பு அலகு அல்லது தரைப்பரப்பு அளவு விகிதாச்சாரம் உரிய அதிகாரியின் மூலம் சம்பந்தப்பட்ட நலத்திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கப்படும் நாளன்று செயலாக்கத்தில் உள்ள நகர்ப்புற மற்றும் கிராமப்புற திட்ட மேலாண்மை சார் ஒழுங்குமுறைவிதிகளுக்கு ஏற்ப அமைய வேண்டியது அவசியம்.

   iii சம்பந்தப்பட்ட நலத்திட்டத்தை ஏற்றுநடத்தும் பொறுப்புடையவர்கள் உரிய அதிகாரியால் சம்பந்தப்பட்ட செயல்திட்டம் ஒப்புதல் அளிக்கப்பட்ட தேதியில் நடைமுறையில் உள்ள 'நகர்ப்புற மற்றும் கிராமப்புற திட்டப்பணி சார் ஒழுங்கமைவு விதிகளுக்குட்பட்ட உரிய அளவாய் தரைப்பரப்பு அள்வீடுகள் மற்றும் தரைப்பரப்பு விகிதாச்சாரம் ஆகியவற்றை நிர்ணயித்துக்கொள்ள வேண்டியது அவசியம்.

C. மத்திய மும்பையில் இடிந்த, சிதிலமடைந்த, பாதுகாப்பற்ற கட்டிடங்களின் மறுசீரமைப்பு:

1. மத்திய மும்பையில் இடிந்த, சிதிலமடைந்த, பாதுகாப்பற்ற கட்டிடங்கள் கடற்கரை ஒழுங்குமுறை மண்டலத்தில் ஏராளமாக உள்ளன. இவையெல்லாம் மிகவும் அபாயகரமான நிலையில் உள்ளவை. எனவே, இத்தகைய அபாயகரமான நிலையில் உள்ளவையாகக் குறித்துக்

காட்டப்படும் கட்டிடங்களை உடனடியாக மறுசீரமைக்கவேண்டிய தேவை உள்ளது. இந்த செயல்திட்டங்கள் பின்வரும் விதிமுறைகள், பாதுகாப்பமைவுகளுக்கு உட்பட்ட அளவில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

2. இத்திட்டங்கள் கீழ்வரும் கட்டுபாடுகள் மற்றும் பாதுகாப்பு அமைப்புகளுக்கு உட்பட்டு செயல்படுத்தப்படலாம்

    i. நடப்பிலுள்ள ஒழுங்குவிதிகளுக்கேற்ப, சம்பந்தப்பட்ட கட்டிடங்களின் உரிமையாளர்களின் பங்கேற்போடு அல்லது தனிப்பட்ட தொழில்முறைக்கட்டிட மறுசீரமைப்பாளர்களின் உதவியோடு நேரடியாகவோ, கூட்டுமுயற்சியாகவோ, அவையொத்த பிற முன்னுதாரனங்களைக் கணக்கில் எடுத்துக்கொண்ட அளவிலோ மேற்குறிப்பிட்ட திட்டங்கள் மேற்கொள்ளப்பட அனுமதிக்கப்படலாம்.
    ii. சம்பந்தப்பட்ட நலத்திட்டத்தை ஏற்றுநடத்தும் பொறுப்புடையவர்கள் உரிய அதிகாரியால் சம்பந்தப்பட்ட செயல்திட்டம் ஒப்புதல் அளிக்கப்பட்ட தேதியில் நடைமுறையில் உள்ள 'நகர்ப்புற மற்றும் கிராமப்புற திட்டப்பணி சார் ஒழுங்கமைவு விதிகளுக்குட்பட்ட உரிய அளவாய் தரைப்பரப்பு அளவீடுகள் மற்றும் தரைப்பரப்பு விகிதாச்சாரம் ஆகியவற்றை நிர்ணயித்துக்கொள்ள வேண்டியது அவசியம்.
    iii. சம்பந்தப்பட்ட கட்டிடங்களின் மூலக் குடியிருப்பாளர்களுக்கு உரிய பாதுகாப்பமைவுகளை மறுசீரமைப்புத் திட்டப் பொறுப்பாளர்கள், மேற்கண்ட நிபந்தனைவிதி 1இன் அளவில் உத்திரவாதப்படுத்தவேண்டியது அவசியம்.

d. இதற்கான உடனடி அறிவிப்பாணையில் சொல்லப்பட்டுள்ளவற்றால் கட்டுப்படுத்தப்படாத அளவில், குடிசைவாழ்பகுதிகளுக்கான வளர்ச்சி-மேம்பாட்டுப் பணிகள், மற்றும் இடிந்த, சிதிலமடைந்த, பாதுகாப்பற்ற கட்டிடங்களின் வளர்ச்சி-மேம்பாட்டுப் பணிகள் பத்திகள் b மற்றும் C யில் வகுத்துரைக்கப்பட்டுள்ள அளவில், நலத்திட்டப் பொறுப்பாளர்களால் வெளிப்படையாகவும், பொறுப்பேற்புடனும், கீழ்க்கண்ட முன் – நிபந்தனைகளுக்கு உட்பட்ட அளவில் மேற்கொள்ளப்படவேண்டியது அவசியம்.

1.(i) உரிய அதிகாரிகள்/அதிகார அமைப்புகள் அனுமதியளிக்கப்பட்ட அளவில் மேற்கொள்ளப்படும் மீள்-மேம்பாடு மற்றும் மீள்-கட்டுமானப் பணிகளுக்கான செயல்திட்டங்கள் தொடர்பாய் 2005ஆம் ஆண்டைய 'தகவல் அறியும் உரிமைச் சட்டத்தைப் பயன்படுத்திக்கொள்ள இயலும்.

ii. மகராஷ்டிர மாநில அரசோடு கலந்தாலோசித்து அதன் பேரில் உரிய பதவியில் உள்ளவர்கள் இடம்பெறும் CPIO மற்றும் முதல் மேல் முறையீட்டதிகாரி ஐ அமைக்கின்ற ஆணையை மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம் வெளியிடவேண்டும்.

iii. மகராஷ்டிர மாநில அரசின் உரிய அதிகாரியால் 2005ஆம் ஆண்டைய தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் பகுதி 4ல் கண்டுள்ளபடி மேற்படி சட்டத்திற்குப் பொருந்தும் அளவில் குடிசைப்பகுதிப் புனரமைப்புத் திட்டம் குறித்த விவரங்கள், அதன் ஒட்டுமொத்த வரைவு மற்றும் அதில் இடம்பெறப்போகும் குடிசைவாழ் மக்கள் என அனைத்து விவரங்களும் உள்ளது உள்ளப்டி தரப்படுவது அடிப்படைத் தேவையாக, மேற்படி சட்டத்தின் கீழ் கோரப்படும் தகவல்களை அதிகாரபூர்வமாக அங்கீகரிப்பதற்கு முன்பான ஒரு மாதத்தில் தரப்படவேண்டும்;

iv. உப-பத்தி (V) இன் பொருள் (!!!)இன் உப-பொருள் (b) மற்றும் (c)யில் குறிக்கப்பட்டுள்ள செயல்திட்டங்கள் தொடர்பாய் அவற்றைச் செயல்படுத்தும் பொறுப்பிலுள்ள அரசு அதிகாரி அல்லது செயல் இயந்திரம் அவற்றின் அலுவலகங்களில் தகுதிவாய்ந்த கட்டுமான தொழில்முனைவோர்கள், கட்டப்படவுள்ள குடியிருப்புகளின் மொத்த எண்ணிக்கை, வீடுகளைப் பெறத் தகுதிவாய்ந்த குடிசைவாழ் நபர்களின் பெயர்கள் தவிர விற்பனைக்கு அங்கே காலியாக

உள்ள இடப்பரப்பு போன்ற பல விவரங்களையும் அறிவிப்புப் பலகைகளில் காட்சிப்படுத்திவைக்கும்.

v. உப-பத்தி (V) இன் பொருள் (iii)இன் உப-பொருள் (b) மற்றும் (c)யின் கீழ் மேற்கொள்ளப்படும் செயல்திட்டங்கள்அந்த செயல்திட்டத்தை மேற்கொள்கிறவர் தகவல் அறியும் சட்டத்தின் (2005) கீழ் வரச் சம்மதித்தால் மட்டுமே அவற்றிற்கு அனுமதியளிக்கப்படும்.

2. குடிசைப்பகுதி புனரமைப்புத் திட்டத்தின் கீழ் இவ்வாறு இடிந்த, சிதிலமடைந்த, பாதுகாப்பற்ற கட்டிடங்களைப் புதுப்பித்தல் தொடர்பான செயல்திட்டங்களைப் பொறுத்தவரை அவற்றின் செயல்திறனையும், முனைப்பையும், செயல்பாடுகளையும், கணக்குவழக்குகளையும் சரிபார்க்க வேண்டி தலைமைக் கணக்காய்வாளரால் (C&AG – Comptroller and Auditor General) உருவாக்கபடும் அதிகாரபூர்வ கணக்காய்வாளர்களை(Auditors) மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம் நியமிக்கலாம்.

3. மகராஷ்டிர மாநில அரசால் ஒரு உயர்மட்ட மேற்பார்வைக் குழு, குறிப்பிட்ட காலவரையறை கூடிய அளவில், பொருள் (V)(!!!)இன் உப-பொருள் (b) மற்றும் (c)யின் கீழ் செயலாக்கம் குறித்து தொடர்ந்த இடைவெளிகளில் மதிப்பாய்வு செய்யும் பொருட்டு உருவாக்கப்படலாம். இந்தக் குழுவில் பலதரப்பட்ட பயனாளிகள்/பங்குதாரர்கள் – பொறியாளர்கள், நகர்ப்புறத் திட்டவியலாளர், கட்டிடக் கலை நிபுணர்கள், பொதுமக்கள், தவிர, உள்ளூரளவிலான நகர்ப்புறம் சார்ந்த அமைப்புகள், மாநில அரசு, மத்திய அரசு ஆகிய பிரிவுகளிலிருந்து முக்கியமான பிரதிநிதிகள் இடம்பெறலா.

4. (V)(iii) இன் உப-பொருள் (b) மற்றும் (c) யின் கீழ் வரும் தனிப்பட்ட செயல்திட்டங்கள் பொதுமக்களோடு கலந்தாலோசனை நடத்தப்பட்டு அதன்பிறகே மேற்கொள்ளப்படவேண்டும். இவற்றைப் பொறுத்தவரை 2006ஆம் ஆண்டின் EIA அறிவிப்பாணையில் வகுத்துரைக்கப்பட்டுள்ள வழிமுறைகளோடு பொருந்தும் அளவில், சம்பந்தப்பட்ட இடிந்த, சிதிலமடைந்த, வரிகட்டப்பட்ட கட்டிடங்களின் சட்ட ரீதியாக உரிமையுடைய குடிசைவாழ் மனிதர், மற்றும், சட்ட ரீதியாக உரிமயுள்ள வாடகைக் குடியிருப்பாளர் ஆகியோருடைய கருத்துகள் மட்டுமே கேட்டறியப்பட்டு கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.

(ii) மத்திய மும்பைப்பகுதியின் 'பசும் நுரையீரலை'க் காக்கவும், பேணிப்பராமரிக்கவும் CRZ-II மண்டலத்திற்கு உட்பட்ட அளவில் வளர்ச்சி-மேம்பாட்டுத் திட்டங்களில் குறித்துக்காட்டப்பட்டுள்ள அனைத்துத் திறந்த வெளிகள், பூங்காக்கள், தோட்டங்கள், மைதானங்கள் யாவும் CRZ-III என்று, அதாவது 'புதிய வளர்ச்சி-மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படலாகா மண்டலம்' என்று வகுத்துரைக்கப்படும்.

(iii) பொழுதுபோக்கு மற்றும் விளையாட்டு தொடர்பான செயல்பாடுகளுக்கென கட்டப்படும் சுத்தம்-சுகாதாரக் கட்டமைப்புவசதிகள், மைதானம், உடற்பயிற்சி மையம் கட்டமைப்புகளுக்கு தரைப் பரப்பு அலகு 15%வரை அனுமதிக்கப்படலாம். ஆனால், இந்தத் திறந்த வெளிகளை குடியிருப்பு வசதிகளுக்கோ, வர்த்தகச் செயல்பாடுகளுக்கோ பயன்படுத்தலாகாது.

(iiii)கோலிவாடா, குறிப்பாக மகராஷ்டிர மாநில அரசின் 1981 ஆம் ஆண்டைய வளர்ச்சித் திட்டம் அல்லது தொடர்புடைய அரசுப் பதிவேடுகளில் அடையாளங்காட்டப்பட்டுள்ள மீனவ சமூகங்களுக்குரிய குடியிருப்புப் பகுதிகள் வரைபடமாக்காப்பட்டு CRZ-III என்று வகுத்துரைக்கப்படும். இங்கு குடியிருப்பு வீடுகளின், பகுதிகளின் கட்டுமானப்பணிகள், மீள்-கட்டுமானப் பணிகள் ஆகிய அனைத்துவகையான நடவடிக்கைகளும் ஏற்புடைய நகர்ப்புற மற்றும் கிரம்மப்புற சீரமைப்புத் திட்டங்களில் கண்டுள்ள ஒழுங்குவிதிகளுக்கு உட்பட்ட அளவில் மேற்கொள்ளப்படும்.

(ivi) மாநில அரசால் அடையாளம் காட்டப்பட்ட மீனவர் சமுதாயம் மற்றும் இதர அச்முதாயதினரின் மீள்-கட்டுமானப் பணிகள் மற்றும் புனரமைக்கும் வேலைகள், தகுதியுடைய ஆணைகுழுக்காளால் கருத்தில் கொண்டு முன்னுரிமை கொடுக்கப்பட்டு நகர்ப்புற மற்றும் கிரம்மப்புற சீரமைப்புத் திட்டங்களில் கண்டுள்ள ஒழுங்குவிதிகளுக்கு உட்பட்ட அளவில், அனுமதி அளிக்கலாம்

2. கேரள மாநிலத்துக்கான கடற்கரை ஓழுங்குமுறை மண்டலம் (CRZ)

கேரள மாநிலக் கடலோரப் பகுதிகளின் தனித்தன்மைகளை, அதன் காயல்கள்,, காயல்களில் உள்ள தீவுகள், மற்றும், கடலோரப் பகுதிகளின் இடவரம்பு ஆகியவற்றைக் கவனத்தில் எடுத்துக்கொண்ட அளவில், கீழே தரப்பட்டுள்ள CRZ செயல்பாடுகள் பின்வரும் விதமாய் ஒழுங்கமைக்கப்படும்.

(i) காயல்களில் உள்ள தீவுகள் அனைத்தும் CRZ அறிவிப்பாணையின் கீழ் வருவன.

(ii) கேரளாவின் காயல் பகுதிகளுக்குள்ளாய் அமைந்துள்ள தீவுகள் நிலம்நோக்கிய பகுதி மீதான பேரலைக்கோட்டிலிருந்து அகலப்போக்கில் 50 மீட்டருக்கு உட்பட்ட பகுதியில் அமைந்த்ருந்தால் அவை CRZ பகுதியாகக் கொள்ளப்படும்.

(iii) இந்த காயல் தீவுகளின் உயர் அலைக்கோட்டிலிருந்து 50 மீட்டர்களுக்கு அப்பால், உள்ளூர் மக்கட்சமூகங்களின் குடியிருப்புகள் பழுதுபார்க்கப்படலாம்; புனரமைக்கப்படலாம். எனில், புதிய வீடுகள் கட்ட அனுமதியில்லை.

(iv) காயல்களில் அமைந்துள்ள, நிலம்நோக்கிய பகுதி மீதான உயரலைக் கோட்டிலிருந்து 50 மீட்டர்களுக்கு அப்பால், உள்ளூர் மக்கட்சமூகங்களின் வீடுகள் கிராமப் பஞ்சாயத்தின் முன் அனுமதி பெற்று கட்டப்படலாம்.

(v) மீன் பிடித்துறை, பாரம்பரிய முறைகளில் மீன் உலர்த்தும் திடல்கள்,, வலை தைக்கும், காயப்போடும் திடல், படகுகள் கட்டும் பகுதிகள், படகுகளைப் பழுதுபார்க்கும் இடங்கள், பனிக்கட்டித் தயாரிப்புத் தொழிற்சாலை, அன்னபிற இந்தக் காயல் தீவுகளின் உயர் அலைக்கோட்டிலிருந்து 50 மீட்டர்கள் அகலப்பரப்பிற்குள்ளாக மேற்கொள்ளப்படும்.

3. கோவா மாநில கடற்கரை ஓழுங்குமுறை மண்டலம் (CRZ)

கோவா மாநிலத்தின் பிரட்யேகத் தன்மைகளையும் சூழல்களையும் – அதன் கடந்த கால வரலாறு, மற்றும் அதன் பிறவேறு வளர்ச்சி-மேம்பாடுகள் ஆகியவற்றை கவனத்தில் எடுத்துக்கொண்ட அளவில், கீழே தரப்பட்டுள்ள குறிப்பான செயல்பாடுகள் ஒழுங்கமைக்கப்பட்டு தொடர்புடைய பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்:

(i) கோவா மாநில அரசு அங்குள்ள மீனவ கிராமங்களை கடற்கரை ஒழுங்குமுறை மண்டலப் பகுதிகளாக அறிவிக்க வேண்டும். அவற்றில் மீன்பிடித் தொழில் மற்றும் அதனோடு தொடர்புடைய தொழில்கள், செயல்பாடுகளுக்குத் தேவைப்படும் அனைத்துவிதமான கடலோரப் பரப்பிலான வசதிகளும் – மரபான வழியில் மீன் பதனிடத் தேவையான திடல்கள், படகுகள் கட்ட மற்றும் பழுதுபார்க்கத் தேவையான திடல்கள், வலை பின்னும் மற்றும் பழுதுபார்க்கும் திடல்கள், பனிக்கட்டி சேமிக்கும் இடங்கள், மீன் ஏல அரங்குகள், மீன் பிடி துறைமுகங்கள் ஆகிய வசதிகள் வழங்கப்பட வேண்டும்.

(ii) CRZ பகுதிகளில் வாழும், மீனவ சமுதாயம் உள்ளிட்ட அளவிலான உள்ளூர் மக்கட்சமூகங்களின் கட்டிடங்களைப் பழுதுபார்ப்பது, புதுப்பிப்பது ஆகிய நடவடிக்கைகள் அனுமதிக்கப்ப்டும்.

(iii) செப்டம்பர் மாதம் முதல் அடுத்த மே மாதம் வரையான காலகட்டத்தில் முழுமையான அளவு தாற்காலிக, மற்றும் பருவகாலத்திற்கு மட்டுமான வீடுகள் வழிவழியாக இந்தப் பகுதிகளில் உருவாக்கப்பட்டுவருகின்றன. இது தொடரும்

(iv) அலையழுத்தத் தாக்கத்தால் பாதிக்கப்படுகின்ற வாழ்க்கைச்சூழல் நுண்ணுணர்வுமிக்க தாழ்நிலப் பகுதிகள் – கஸான் நிலங்கள் என்று வழங்கப்படுபவை வரைபடமாக்கப்படவேண்டும்.

(v) இத்தகைய கஸான் நிலப்பகுதிகளின் ஓரங்களில் வளர்க்கப்படும் அலையாத்தி மரங்கள் பாதுகாக்கப்படவேண்டும். கஸான் நிலங்களை உரியவிதமாய் கையாளும் மேலாண்மைத் திட்டம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும். இத்தகைய நிலப்பகுதிகளில் எந்தவிதமான மேம்பாட்டுப் பணிகளும் அனுமதிக்கப்பட மாட்டாது.

(vi) விரிகுடாக்கள், கழிமுகங்கள் ஓரமாக உருவாகியுள்ள மணல் தேரிகள், கடற்கரைத் திட்டுகளை கணக்கெடுப்பு செய்து வரைபடமாக உருவாக்க வேண்டும். இத்தகைய மணல் தேரிகளில் எந்த விதமான வர்த்தக மற்றும் வளர்ச்சி நடவடிக்கைகளும் அனுமதிக்கப்பட மாட்டாது.

(vii) மோர்ஜிம், கால்ஜிபா, அகோண்டா ஆகிய கடற்கரைகள் ஆமைகள் இனவிருத்தி செய்யும் பகுதி என அறிவிக்கப்பட்டு, வன உயிரினங்கள் பாதுகாப்புச் சட்டம் 1972 இன் கீழ் பாதுக்காக்கப்படுகிறது. இத்தகைய குஞ்சு பொரிக்கும் இடங்கள் கணக்கிடப்பட்டு, அவற்றைப் பாதுகாக்கும் மேலாண்மைத் திட்டம் உருவாக்கப்பட வேண்டும்.

(viii) உப-பத்தி (vii)யில் வகுத்துரைக்கப்பட்டுள்ளபடி ஆமைகள் குஞ்சு பொரிக்கும் இத்தகைய நிலப் பகுதிகளில் எந்த வளர்ச்சிப் பணிகளும் அனுமதிக்கப்பட மாட்டாது.

4. a. பாதிக்கப்படும் நெருக்கடியில் உள்ள கடற்கரை பகுதிகள் Critical Vulnerable Coastal Areas(CVCA) என்று அறியப்படும், மிக மோசமான பாதிப்புக்கு ஆளாகியுள்ள, ஆளாகக்கூடிய அபாயநிலயிலுள்ள கடலோரப் பகுதிகளாக வகுத்துரைக்கப்பட்டுள்ள வாழ்க்கைச்சூழல் சார் நுண்மையான பகுதிகளில் சுந்தர்வனம் மற்றும் இதர சுற்றுச்சூழல் முக்கியம் வாய்ந்த பகுதிகளுக்கான கடற்கரைப் பகுதிகள் மீனவ சமூகம் உள்ளிட்ட அளவிலான உள்ளூர் மக்கட்சமுதாயங்களின் பங்கேற்போடு நிர்வகிக்கப்பட்டு வரவேண்டும்.

b. சுந்தர்வன அலையாத்திமரப் பகுதி மற்றும் பிறவேறு வாழ்க்கைச்சூழல் ரீதியாய் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளவை - குஜராத்தின் காம்பட், கட்ச் வளைகுடாக்கள், மராட்டியத்தின் மால்வன், மசாசி - வனோரி, கர்நாடகாவின் அக்ரா- ரத்னகிரி, கார்வார், கூந்தபுர், கேரளாவின் வயனாட், ஒரிசாவின் பைதார்கனிகா, ஆந்திராவின் கோரிங்கம், கிழக்கு கோதாவரி, கிருஷ்ணா ஆகிய பகுதிகள், அவ்வப்பகுதிகளைச் சேர்ந்த, அங்கு வாழ்ந்துவருகின்ற மீனவ சமுதாயத்தினர், பிறவேறு மரபான மக்கட்சமுதாயத்தினர், தங்களுடைய வாழ்க்கைக்கு அங்குள்ள வாழ்வாதாரங்களையே அண்டியிருக்கக்கூடிய மக்கட்பிரிவினரிடம் கலந்து பேசிய பிறகு, கடற்கரை வாழ்வாதாரங்களையும், குடியிருப்புவசதிகளையும் சீரிய முறையில் பராமரித்துவருவதையும், அவற்றின் நிலையான பயன்பாட்டிற்கு வழிசெய்வதையும் நோக்கமாகக் கொண்ட அளவில், ‘மிக 'மோசமான பாதிப்புகளுக்கு வாய்ப்புள்ள பகுதிககள்' எனப் (CVCA) பிரகடனம் செய்யப்படும்.

c. உள்ளூர் மக்கட்சமூகத்திடமும் சம்பந்தப்பட்ட பயனாளிகள்/பங்குதாரர்கள் – மாநில அரசு, , உள்ளூர் மக்கள், சம்பந்தப்பட்ட கடலோரப் பகுதிகளில் வாழ்ந்துவருபவர்கள், அன்னபிறரிடமும் கலந்தாலோசனை, நடத்தி, கருத்துகளைக் கேட்டறிந்து அவற்றின் அடிப்படையில் CVCA வை இனங்கண்டறியும் வழிமுறைகள் மத்திய சுற்றுச்சூழல் மற்றும்

வனத்துறை அமைச்சகத்தால் (MoEF) உருவாக்கப்பட்டு அவை ஒரு வழிகாட்டிக்குறிப்பேட்டில் தொகுக்கப்பட்டு அறிவிக்கப்பட வேண்டும்., **IMP CZMA**

d. இத்தகைய CVCA வுக்காகத் தயாரிக்கப்படும் ஒருங்கிணைந்த மேலாண்மைத் திட்டம் (IMP) அடிப்படையாக அலையாத்திக்காடுகளைப் பராமரிப்பது, நிர்வகிப்பது, உள்ளூர் மக்கட்சமூகத்தின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவது – அவர்களுக்குத் தேவையான மருந்தகங்கள், பள்ளிக்கூடங்கள், சாலைகள், மீன்பிடித்துறைகள், பாலங்கள், மழைக்கு ஒதுங்கும் பொதுவிடங்கள், கழிப்பறை வசதிகள், நீர் வினியோகம், கழிவுநீர்க் கால்வாய்கள், கடல்நீர் மட்டம் உயர்வதினால் விளையும் பாதிப்புகளின்போது அதற்குரிய நிவாரண நடவடிக்கைகள், இயற்கைச் சீற்றங்களின்போது உரிய பாதுகாப்பு, நிவாரண நடவடிக்கைகள் என உள்ளூர் மக்களுக்கான அடிப்படைத் தேவைகள் எல்லாவற்றையும் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டியது அவசியம். கடற்கரை மண்டல மேலாண்மைத் திட்டங்களைத் தயாரிக்க, மேற்கண்ட பத்தி 5ற்கேற்ப, அதில் தரப்பட்டுள்ள விதிமுறைகள், வழிமுறைகளுக்கு ஏற்ப ஒருங்கிணைந்த மேலாண்மைத் திட்டம் (IMP) தயாரிக்கப்படும்.

e. இந்த ஒருங்கிணைந்த மேலாண்மைத் திட்டங்கள்(IMPக்கள்) ஏற்கப்பட்டு, அதிகாரபூர்வமாக அங்கீகரிக்கப்படும் வரை மருந்தகங்கள், மருந்தகங்கள், பள்ளிக்கூடங்கள், சாலைகள், மீன்பிடித்துறைகள், பாலங்கள், மழைக்கு ஒதுங்கும் பொதுவிடங்கள், கழிப்பறை வசதிகள், நீர் வினியோகம், கழிவுநீர்க் கால்வாய்கள், என வழிவழியாக அப்பகுதிகளில் வாழ்ந்துவருகின்ற மக்கட்சமூகங்களுக்குத் தேவைப்படுகின்ற அடிப்படை வசதிகள் தொடர்பான திட்டங்கள், தனித்தனி தேவையின் அளவில் CZMA வினால், அவ்வப்பகுதி மக்கட்சமூகத்தினரின் கருத்துகளுக்கு உரிய மதிப்பளிக்கப்பட்டு, பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, ஏற்புடையதெனில் அனுமதிக்கப்படும்.

**[F.No.11-83/2005-IA-III]**
**J.M.MAUSKAR, Addl.Secy**

இணைப்பு 1

<u>கடற்கரை மண்டல மேலாண்மைத் திட்டங்கள்: கடற்கரை ஒழுங்குமுறை மண்டல மேலாண்மைச் செயல்திட்டங்கள் [**CZMPs**] தயாரிப்பதற்கான வழிகாட்டி நெறிமுறைகள்:</u>

I. A. உயர் பேரலை வரிசை(HTL) எல்லைகளை வரையறை செய்தல்

1. நீடித்த கடற்கரை மண்டல தேசிய மையம் (NCSCZ) முன்வைத்துள்ள பரிந்துரையின் அடிப்படையில் மத்திய சுற்றுச்சூழல் வனத்துறை அமைச்சகத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ள முகைமைகள் ஒன்றின் மூலம் உயர் பேரலை வரிசை(HTL) எல்லைகள் வரையறை செய்யப்பட வேண்டும்.
2. மத்திய அரசு அடையாளம் கண்டுள்ள முகமைகள் மூலம் 1:25,000 என்ற அலகில் தயாரிக்கப்பட்ட கடற்கரை மண்டல மேலாண்மை(CZM) வரைபடங்களால் உயர் பேரலை வரிசை(HTL) எல்லைகள் வரையறை செய்யப்படவேண்டும்.
3. உள்ளூர் அளவிலான CZM வரைபடங்கள் கடற்கரை ஒழுங்குமுறை மண்டலங்களை வரையறை செய்ய உதவியாக உள்ளாட்சி அமைப்புகளின் அதிகாரிகள் பயன்படுத்திக் கொள்வதற்காகத் தயாரிக்கப்பட வேண்டும்.
4. மத்திய அரசு ஒப்புதல் பெற்ற CZM வரைபடங்களுடன் கிராம அடங்கல் விவர வரைபடம் பொருந்தும் வகையில் உள்ளூர் அளவிலான CZM வரைபடங்கள் தயாரிக்கப்பட வேண்டும்.

B. CZM வரைபடங்கள் தயாரித்தல்

5. 1:25,000 என்ற அளவிலான அடிப்படை வரைபடங்கள் இந்திய சுற்றாய்வு நிறுவனத்திடமிருந்து பெறப்படவேண்டும். 1:25,000 என்ற அளவிலான வரைபடங்கள் எங்கெல்லாம் கிடைக்கவில்லையோ, அங்கு 1:50,000 என்ற அளவிலான வரைபடங்கள் 1:25,000 என்ற அளவுக்குப் பெரிதாக்கப்பட்டு அடிப்படை வரைபடம் தயாரிக்கப்பட வேண்டும். இத்தகைய வரைபடங்கள் கீழ்க்கண்ட விவரக் குறிப்புகள் கொண்டதாக இருக்க வேண்டும்:

| | |
|---|---|
| அலகு: | 7.5 நிமிடங்கள் X 7.5 நிமிடங்கள் |
| எண்ணிடுதல்: | இந்திய சர்வே நிறுவன(SOI) தாள் எண்ணிடுதல் முறை |
| தரைமட்ட தரவுப் புள்ளி: | எவரெஸ்ட் அல்லது HGS 84 |
| செங்குத்துத் தரவுப்புள்ளி: | சராசரி கடல் மட்டம் (MSL) |
| இட விவரம்: | SOI வரைபடங்களில் உள்ள இட விவரம் அண்மையில் எடுக்கப்பட்ட செயற்கைக் கோள் படங்கள்/ செயற்கைக்கோள் புகைப்படங்களால் புதுப்பிக்கப்பட வேண்டும். |

6. அடிப்படை வரைபடங்களைக் கொண்டு தயாரிக்கப்படும் உயர் நீர் மட்டம் (HWL), தாழ் நீர் மட்டம்(LWL) ஆகிய விவரங்கள் CZM வரைபடங்களுக்கு மாற்றப்பட வேண்டும். செயற்கைக்கோள் படங்கள்/ செயற்கைக்கோள் புகைப்படங்களில் உள்ள கடற்கரை நிலவியல் தன்மைகள், கடற்கரை ஒழுங்குமுறை மண்டலம் (CRZ) அறிவிப்பாணைக்குப் பொருத்தமாக HWL/ LWL மட்டங்களில் சரிசெய்யப்பட்டு HTL, LTL எல்லைகளை வரையறை செய்வதற்காகப் பயன்படுத்த வேண்டும். மத்திய அரசால் அடையாளம் காணப்பட்டுள்ள முகமைகளால் இப்பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

7. கடற்கரை ஒழுங்குமுறை மண்டல அறிவிப்பாணையின்படி உயர்பேரலைக்கோடு, தாழ்பேரலைக்கோடு ஆகியவற்றை உயர் நீர் மட்டம், தாழ் நீர் மட்டமாகிய இரண்டிலும் நிர்ணயிக்க ஆகாயமார்க்கப் புகைப்படங்கள், செயற்கைக்கோள் பிம்பங்கள் ஆகிய துறையிலான கடற்கரை புவிப்பரப்பு ஆய்வுத்துறை வல்லுநர்களின் உதவி. சிறந்த கண்டுபிடிப்புகளின் உதவி ஆகியவை கோரப்படும்;பயன்படுத்திக்கொள்ளப்படும்.
8. HTL, LTL எல்லைகளை வரையறை செய்யும்போது கீழ்க்காணும் நிலவியல் அம்சங்கள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்:-
   மணற் கடற்கரைகள் என்றால் நிலம்நோக்கிய (மழைக்கால) உச்சிப்பகுதி/முகடு;
   பாறைகள், முண்டுகள், செங்குத்துப் பாறைகள்;
   கடற் சுவர், தடுப்புகள், அரண்கள்.
9. உயர் பேரலை கோடு (HTL) எல்லையைக் கொண்டே 500 மீ., 200 மீ. எல்லைகள் வரையறை செய்யப்பட வேண்டும்.
10. கடற்கரை ஓழுங்குமுறை மண்டல அறிவிப்பாணையில் (CRZ) குறிப்பிட்டபடி HTL மற்றும் LTL ஆகிய எல்லைகளுடன் கடலில் இருந்து நிலம் நோக்கிச் செல்லும் நீர் நிலைகளின் பேரலைச் செல்வாக்குப் பகுதியை வரையறுக்கும் எல்லைகளும் நிலவியல் தன்மைகள்/ அம்சங்களின் உதவியுடன் CZM வரைபடங்களில் குறிக்கப்பட வேண்டும்.
11. கடற்கரை ஓழுங்குமுறை மண்டல (CRZ) அறிவிப்பாணையின்படி கடற்கரை மண்டலங்களை வகைப்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
12. பெறப்பட்ட புள்ளிவிவரங்களின் நுட்பமான உட்பிரிவுகளைத் தெளிவாக எடுத்துக்காட்டும்படியாக தரப்படுத்தப்பட்ட தேசிய/ சர்வதேசிய வண்ணக் குறிகள் பயன்படுத்தப்பட வேண்டும்.

3. உள்ளூர் மட்ட CZM வரைபடங்கள்

உள்ளூர் மட்ட CZM வரைபடங்கள் கடற்கரை மண்டல மேலாண்மைத் திட்டங்களை அமல்படுத்துவதற்கு உதவியாக உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் இதர முகமைகள் பயன்படுத்திக் கொள்வதற்கானவை ஆகும்.

13. அடிப்படை வரைபடங்களில் 1:3960 அல்லது அதற்கு நெருக்கமான அளவுகளில் தயாரிக்கப்பட்ட (கிராம) அடங்கல் வரைபடங்கள் பயன்படுத்தப்பட வேண்டும்.
14. இத்தகைய வரைபடங்கள் வருவாய்த் துறையினரால் அதற்குரிய விதிமுறைகளுடன் தயாரிக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளன.
15. மத்திய அரசு ஒப்புதல் பெற்ற CZM வரைபடங்களில் கடற்கரை நிலவியல் தன்மைகள்/ அம்சங்களைப் பயன்படுத்தி குறிக்கப்பட்டுள்ள விரிவான பௌதிக விவரங்கள் அடிப்படையில் கிராம அடங்கல் வரைபடங்களில் (கடற்கரை ஓழுங்குமுறை மண்டல (CRZ) அறிவிப்பாணையில் குறிப்பிட்டபடி) HTL மற்றும் LTL ஆகிய எல்லைகள் குறிக்கப்பட வேண்டும். கடற்கரை ஒழுங்குமுறை மண்டலத் திட்டங்களிலிருந்து உள்ளூர் கடற்கரை ஒழுங்குமுறை வரைபடத்திற்கு பகுப்புகளும், பிரிவுகளும் மாற்றப்பட வேண்டும்.
16. உயர் பேரலைக் கோட்டின் (HTL) எல்லையைக் கொண்டே 500 மீ., 200 மீ. எல்லைகள் வரையறை செய்யப்பட வேண்டும்.
17. கடற்கரை ஓழுங்குமுறை மண்டலம் (CRZ) அறிவிப்பாணையில் குறிப்பிட்டபடி) HTL மற்றும் LTL ஆகிய எல்லைகளுடன் கடலில் இருந்து நிலம் நோக்கிச் செல்லும் நீர் நிலைகளின் பேரலைச் செல்வாக்குப் பகுதியை வரையறுக்கும் எல்லைகளும் நிலவியல் தன்மைகள்/ அம்சங்களின் உதவியுடன் CZM வரைபடங்களில் குறிக்கப்பட வேண்டும்.
18. கடற்கரை ஓழுங்குமுறை மண்டலங்கள் (CRZ) CZM வரைபடங்களில் இருந்து உள்ளூர் CZM வரைபடங்களுக்கு மாற்றப்பட வேண்டும்.

19. CZM வரைபடங்களில் தரப்பட்டுள்ள அடையாளச் சின்னங்கள் பின்பற்றப்பட வேண்டும்.
20. CZM வரைபடங்களில் தரப்பட்டுள்ள அளவில் வண்ணக்குறிகள் பின்பற்றப்பட வேண்டும்.
21. மத்திய அரசு ஒப்புதல் பெற்ற உள்ளூர் முகமைகளைக் கொண்டு கிராம அடங்கல் வரைபடங்கள் தயாரிக்கப்பட வேண்டும். சமபந்தப்பட்ட மாநில/ யூனியன் பிரதேசங்களின் கடற்கரை மண்டல மேலாண்மை ஆணையங்களின் வழிகாட்டுதல்களின்கீழ் உள்ளூர் முகமைகள் செயல்பட வேண்டும்.

இடர் வரைபடம் தயாரித்தல்

II. கடற்கரை ஓழுங்குமுறை மண்டலங்களை (CRZ) வகைப்படுத்துதல்

1. கடற்கரை ஓழுங்குமுறை மண்டலம் (CRZ) I, II, III, IV , V என்று கடற்கரை ஓழுங்குமுறை மண்டல அறிவிப்பாணை பாரா 5 இல் வரையறுக்கப்பட்டுள்ள அம்சங்களுக்குப் பொருத்தமாக CZM வரைபடங்கள் தயாரிக்கப்பட வேண்டும்.
2. CZM வரைபடங்கள் அப்பகுதியின் நிலப் பயன்பாட்டுத் திட்டத்தைத் தெளிவாக வரையறுத்து, கடற்கரை ஓழுங்குமுறை மண்டலம் (CRZ) I பகுதிகளைப் பட்டியலிட வேண்டும். பாராக்கள் 7. I. A மற்றும் B ஆகியவற்றில் பட்டியலிடப்பட்டுள்ள அனைத்து கடற்கரை ஓழுங்குமுறை மண்டலம் (CRZ) I பகுதிகளும் தெளிவாகக் குறிக்கப்பட்டு, வண்ணக்குறிகள் இடப்படுவதன் மூலம், கடற்கரை ஓழுங்குமுறை மண்டலம் (CRZ) I பகுதிகள் ஒவ்வொன்றும் தெளிவாக அடையாளம் காட்டப்பட வேண்டும்.
3. 10,000 sqm பரப்புக்கு அதிகமாக உள்ள 'அலையாத்திக் காடு'களையொட்டி, தாங்கல் பரப்புகளை பிரித்துக் காட்டும் வகையில் தனியான வண்ணத்தில் மென் மண்டலம் வரையப்பட வேண்டும்.
4. தாங்கல் பரப்புகளை கடற்கரை ஓழுங்குமுறை மண்டலம் (CRZ) I பகுதிக்குள் வருவதாக வகைப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.
5. மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்தால் தயாரிக்கப்படவிருக்கும் இடர் கோடு, 1: 25,000 என்ற அளைவில் உள்ள CZM வரைபடங்களிகளின் மேல் பொருத்தியமைக்கப்பட வேண்டும்.
6. மொத்த மனைகளில் 50% க்கும் அதிகமான மனைகள் கட்டப்பட்டவை என்ற விகிதத்தில் நிலையாகக் கட்டப்பட்டப்பட்ட மனைகளைக் கொண்ட பகுதிகள் கடற்கரை ஓழுங்குமுறை மண்டலம் (CRZ) II மண்டலமாகும். மேலும், பாரா 7 (II) இல் பட்டியலிடப்பட்டுள்ள வரம்புகளுக்குள் இப்பகுதிகள் வந்துவிடும்.
7. கடற்கரை ஓழுங்குமுறை மண்டலம் (CRZ) III பகுதிகளில், மீனவக்கிராமங்கள், மீனவ சமுதாயங்களின் பொதுச் சொத்துகள், மீன் பிடி துறைமுகங்கள், மீன் காயவைக்கும் களங்கள்/மேடைகள், உள்ளூர் சமுதாயங்களுக்கான அடிப்படை வசதிகளான மருந்தகங்கள், சாலைகள், பள்ளிகள் போன்றவை அடங்கல் அலகு வரைபடங்களில் குறிக்கப்பட வேண்டும். மாநில அரசுகள் விரிவாக்கம் மற்றும் அன்னபிற தேவைகள் காரணமாக கடற்கரை மீனவ சமுதாயங்களில் ஏற்படலாகும் நீண்டகாலத் தேவையைக் கவனத்தில் எடுத்துக்கொண்ட அளவில் அதற்குரிய வீட்டுவசதித் திட்டங்களைத் தயாரிக்கவேண்டும்.
8. அபாயக் கோட்டிற்கும் நிர்ணயிக்கபட்டிருக்கும் 500 மீட்டருக்கும் இடையே, அல்லது தரைநோக்கிய நிலப்பகுதியில் அமைந்திருக்கும் நீர்ப்பரப்பிலும் மேலே பட்டியலிடப்பட்டுள்ளவை தவிர்த்து வேறு எந்தவிதமான வலர்ச்சி-மேம்பாட்டுப் பணிகளும் மேற்கொள்ளப்படலாகாது. உள்ளூர் மக்கட்சமூகங்களின் குடியிருப்புப் பகுதிகல்-மீனவர்களுடையது உள்ளிட்ட அளவில் – அவை அபாயக் கோட்டின் கடல்நோக்கிய பகுதியில் அமைந்திருக்கும் பட்சத்தில் அவை மாற்றியமைத்துத் தரப்படும். உள்ளூர் சமூகங்களைச்

சேர்ந்த இத்தகைய அபாயநிலைக் குடியிருப்புப் பகுதிகளுக்கான பேரிடர் சார் போதிய பாதுகாப்பு வசதிகளைச் செய்து தருவது மாநில அரசுகளின் கடமையாகும்

9. கடற்கரை ஒழுங்குமுறை மண்டலம் (CRZ) IV பகுதியின் நீர்ப் பகுதி பிரித்துக் காட்டப்பட வேண்டும். அவை கடல், காயல், தடாகம், கழிமுகம், உப்பனாறு, குடாக்கடல் போன்றவை என்றால் மிகத் தெளிவாக வரைபடங்களில் பிரித்துக் காட்டப்பட வேண்டும். நீர் நிலைகளின் இத்தகைய வகைப்படுத்தலுக்காக கடல் நீர்வரைவியல் அலுவலகம் பயன்படுத்தும் கலைச் சொற்களைப் பயன்படுத்துவது சிறந்தது.
10. நீர் நிலைகளின் நீர் வளப் பகுதிகளும், நீர் குஞ்சு பொரிக்கும் பகுதி தெளிவாகப் குறித்துக் காட்டப்பட வேண்டும்.
11. தண்ணீர் தரம் குறித்து மாசு கட்டுப்பாடு வாரியம் வகுத்துள்ள தரக்கட்டுபாடுகளின் அளவிலான மாசு அளவுகள் தொடர்புடைய நீர்ப் பகுதிகளில் பிரித்துக்காட்டப்பட வேண்டும்.
12. கடற்கரை ஒழுங்குமுறை மண்டலம் (CRZ) V பகுதியில் கடற்கரை மண்டல மேலாண்மைத் திட்ட வரைபடத்தின் மீது நிலப் பயன்பாட்டு வரைபங்கள் பதிக்கப்பட்டு (superimpose), அதில் I, II, III, IV, V ஆகிய ஐந்து பகுதிகளும் தெளிவாகப் பிரித்துக் காட்டப்பட வேண்டும்.
13. தற்போது பயன்பாட்டில் உள்ள ஒப்புதல் பெற்ற கட்டுமானங்கள் தெளிவாகக் குறிக்கப்பட வேண்டும்.
14. புயல், சூறாவளி, சுனாமி போன்ற தருணங்களில் மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ள வசதியாக புயல் பாதுகாப்பு கூடாரங்கள், மழைக் கூடாரங்கள், ஹெலிகாப்டர் தளங்கள் மற்றும் சாலைகள் இணைப்பு உள்ளிட்ட உள்கட்டமைப்புத் தகவல்கள் அனைத்தும் CZM வரைபடங்களில் தெளிவாகச் சுட்டிக்காட்டப்பட வேண்டும்.

III. கடற்கரை ஒழுங்குமுறை மண்டல அறிவிப்பானைக்கு இணக்கமாக, மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட, கடற்கரை மண்டல மேலாண்மைத் திட்டங்கள்

1. 2011 ஆம் ஆண்டைய CRZ அறிவிப்பாணையின் கீழ் CZMP க்களைத் தயாரிக்கும்போது 1991 CRZ அறிவிப்பாணையின் கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ள CZMPக்கள் ஒப்புநோக்கப்பட வேண்டும். அப்படி ஒருவேளை தயாரிப்புநிலையிலுள்ள CZMP, 1991 CRZ அறிவிப்பாணையின் கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைவிலிருந்து மாறியிருக்குமெனில் அந்த விலகலுக்கான நியாயம் சம்பந்தப்பட்ட CZMP பொறுப்பாளர்களால் தரப்பட வேண்டும்.

IV. CZMP மீதான பொதுமக்களின் பார்வைக்காட்சி

a. EPA 1986 சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டுள்ள வரைவு CZMP திட்டங்களுக்கு விரிவான விளம்பரம் கொடுக்கப்பப்பட்டு 1986ஆம் ஆண்டைய சுற்றுச்சூழல் (பாதுகாப்பு)ச் சட்டத்தின் கீழ் ஆலோசனைகள், ஆட்சேபணைகள் பெறப்பட வேண்டும். வட்டார அளவில் சம்பந்தப்பட்ட CZMAக்கள் வரைவு CZMP குறித்த பொதுமக்கள் கருத்துக்கேட்புக் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்யவெண்டும்.
b. அவ்வாறு பெறப்பட்ட ஆலோசனைகள், ஆட்சேபணைகள் அடிப்படையில் CZMP திட்டங்கள் மாற்றியமைக்கப்பட்டு, மத்திய சுற்றுச் சூழல் வனத்துறை அமைச்சகத்தின் ஒப்புதல் பெறவேண்டும்.
c. அங்கீகரிக்கப்பட்ட CZMP திட்டம் மத்திய சுற்றுச் சூழல் வனத்துறை அமைச்சக இணையத் தளம் மற்றும் தொடர்புடைய மாநில, யூனியன் பிரதேச CZMA ஆணையங்களின் இணையத் தளங்களில் வெளியிடப்படுவதுடன் அதன் நகலச்சுப் பிரதிகள் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் கிராமப் பஞ்சாயத்து அலுவலகங்களில் கிடைக்கச் செய்திட வேண்டும்.

V. கடற்கரை மண்டல மேலாண்மை திட்ட்டங்களை சீரமைத்தல்

1. சந்தேகம் எப்போதாவது வரும் எனில், தொடர்புடைய மாநில அல்லது யூனியன் பிரதேச கடற்கரை மண்டல மேலாண்மை அதிகாரி, தேசிய நிலையான கடற்கரை மேலாண்மை மையத்தை, கேட்டு அணுகலாம். அவர்கள் கடற்கரை மண்டல மேலாண்மை திட்டங்களை, அண்மைகால செயற்கைக்கோள் மூலம் பெறப்பட்ட உளக்காட்சி கொண்டும், நில மெய் அளவுகள் கொண்டும் சரிபார்க்கலாம்
2. அவ்வாறு திருத்தப்பட்ட வரைபடம், மத்திய சுற்றச்சூழல் மற்றும் வன அமைச்சகத்திடம் பதிவுருக்காக வழங்க வேண்டும்.

****

**இணைப்பு 2**

SPCZ I (i) தவிர SPCZ -இல் அனுமதிக்கப்பட்ட பெட்ரோலிய மற்றும் இரசாயன பொருட்களின் பட்டியல்:

i கச்சா எண்ணெய்
ii திரவ வடிவிலான பெட்ரோலிய எரிவாயு
iii வாகனங்களுக்குப் பயன்படுத்தப்படும் ஸ்பிரிட்
iv மண்ணெண்ணெய்
v விமான எரிபொருள்
vi உயர் வேக டீசல்
vii கசிவு எண்ணெய்
viii புதேன்
ix புரோபன்
x அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயு
xi நெப்தா
xii பர்னஸ் எண்ணெய்
xiii கீழ் சல்பர் ஹெவி ஸ்டாக்
xiv திரவ வடிவிலான இயறை எரிவாயு
xv உரம் மற்றும் உரம் தயாரிக்கப்படும் கச்சாப் பொருட்கள்

****

**இணைப்பு 3**

**வகுத்துரைக்கப்பட்டுள்ள CRZ III மற்றும் CRZ II ஆகிய பகுதிகளில் மத்திய சுற்றுச்சூழல் வனத்துறை அமைச்சகத்தின் முன் அனுமதி பெற்று சுற்றுலாப் பயணிகள் மற்றும் வெளியூர் ஆட்கள் தற்காலிகமாகத் தங்குவதற்காக கடற்கரை விடுதிகள் மற்றும் உணவகங்கள் உருவாக்குவதற்கான வழிகாட்டி விதிகள்.**

I. வகுத்துரைக்கப்பட்டுள்ள SPCZ III மற்றும் SPCZ II ஆகிய பகுதிகளில் மத்திய சுற்றுச்சூழல் வனத்துறை அமைச்சகத்தின் முன் அனுமதி பெற்று சுற்றுலா பயணிகள் மற்றும் வெளியூர் ஆட்கள் தற்காலிகமாகத் தங்குவதற்காக கடற்கரை விடுதிகள் (Resorts) மற்றும் உணவகங்கள் (Hotels) கட்டுவது கீழ்க்கண்ட விதிகளுக்கு உட்பட்டதாகும்:

a. இடர் வரிசையில் இருந்து கடல் நோக்கிய பகுதி, மற்றும், உயர் பேரலைக் கோடு மற்றும் தாழ் பேரலைக் கோடு ஆகியவற்றிற்கு இடைப்பட்ட பகுதி ஆகியவற்றில் எந்தவிதமான கட்டுமானப் பணிகளையும் திட்ட முன்மொழிவாளர்கள் செய்யக்கூடாது.
b. நிலவியல் அம்சங்கள் மற்றும் ஒட்டுமொத்த கடற்கரை மண்டல மேலாண்மைத் திட்டம் ஆகியவற்றை மத்திய சுற்றுச்சூழல் வனத்துறை அமைச்சகம் கணக்கிலெடுத்துக் கொண்டபின்னரும் பொருத்தமாகத் தோன்றினால், உரிய காரணங்கள் எழுத்துபூர்வமாக அளிக்கப்பட்டு, உரிய நிபந்தனைகள், கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு அனுமதி வழங்கலாம்.
c. தனியார் சொத்துகளுக்கு தாவர அரணுடனான உயிர்வேலி அல்லது மின்கம்பி வேலி சுவர் ஆகிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்துகொள்வது, அத்தகைய சுற்றுச்சுவர்கள் பொதுமக்கள் கடற்கரைக்குச் செல்வதைத் தடுப்பதாக இருக்காது என்ற நிபந்தனையில் அனுமதிக்கப்படும்.
d. மணல் குன்றுகள் (தேரிகள்) சமதளப்படுத்தப்படக்கூடாது.
e. கோல்ஃப் கம்பம், வலைக் கம்பம், விளக்குக் கம்பம் ஆகியவை தவிர மற்றபடி விளையாட்டுப் பயிற்சி மற்றும் பந்தய வசதிகள் தொடர்பான நிரந்தரக் கட்டடம் எதுவும் அனுமதிக்கப்பட மாட்டாது.
f. நிலத்துக்கு கீழே அடித்தளம் கட்டுவதனால் அப்பகுதியின் நிலத்தடி நீரோட்டத்துக்கு பாதிப்பு இல்லை என்று மாநில நிலத்தடி நீர் ஆணையத்திடம் 'தடை இல்லா'ச் சான்றிதழ் பெறப்படுவதன் மூலம் அடித்தளம் கட்ட அனுமதி வழங்கலாம்.
g. மாநில நிலத்தடி நீர் ஆணையம் தடையில்லாச் சான்றிதழை வழங்கும்போது மத்திய அரசு வெளியிட்டுள்ள வழிகாட்டுதல் நெறிமுறைகளைக் கணக்கில் எடுத்துக்கொள்ளவேண்டும்.
h. மேம்பாட்டுப்பணி செய்யத் தடையுள்ள மண்டலப்பகுதியில் எந்தவிதமான கட்டுமானமும் அனுமதிக்கப்படாது என்றபோதும், தரைப்பரப்பு அளவுப் பட்டியல் (ஃளோர் ஸ்பேஸ் இண்டெக்ஸ் ) கணக்கீட்டுக்காக மேற்படி மண்டலப் பகுதிக்குள் வரும் இடமும் கணக்கில் எடுத்துக்கொள்ள அனுமதிக்கப்படலாம்.
i. தரை வெளி அலகு (FSI) 0.33க்கு அதிகமாக இருக்கக் கூடாது; அதாவது, மொத்த மனை அளவு 0.4 ஹெக்டேருக்குக் குறையாமலும், அனைத்து தளங்களையும் சேர்த்து மொத்தப் பகுதி மனையின் 33% க்கு மிகாமல் இருக்க வேண்டும்.
j. கட்டுமானங்கள் சுற்றுச்சூழலில் உள்ள நிலவியலுக்கும், உள்ளூர் கட்டடக் கலை வடிவங்களுக்கும் ஏற்றதாக இருக்க வேண்டும்.
k. கட்டடத்தின் ஒட்டுமொத்த உச்சபட்ச உயரம் (அதன் மேற்கூரையின் உச்சிமுகடின் மேல்முனை) 9 மீட்டருக்கு மிகாமலும், தரைத்தளம் + முதல் தளம் என இரண்டு அடுக்குகளுக்கு மிகாமலும் இருக்க வேண்டும்.

l. உயர் பேரலைக் கோட்டில் இருந்து 200மீ தொலவு வரை நிலத்தடி நீரை உறிஞ்சியெடுக்கலாகாது. 200 முதல் 500மீ பகுதிக்குள் மத்திய/ மாநில நிலத்தடி நீர் வாரியங்களின் முன் அனுமதி பெற்று நிலத்தடி நீரை உறிஞ்சியெடுக்கலாம்.

m. நீச்சல் குளம் மற்றும் கட்டடங்களுக்கான கட்டுமான அடித்தளம் நீங்கலாக வேறு எதற்கும் கடல் மணலைச் சமப்படுத்துதல், தோண்டுதல், வாருதல் போன்ற நடவடிக்கைகள் கடலிலிருந்து 500 மீட்டருக்கு உட்பட்ட பகுதியில் அனுமதிக்கப்பட மாட்டாது.

n. திட்டப் பகுதியில் இருந்து வெளியேறும் சுத்திகரிக்கப்பட்ட கழிவு, திடக் கழிவு, கசிவு மற்றும் ஒலி அளவுகள் சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம் 1986 விதிகளுக்கும், மத்திய/ மாநில மாசு கட்டுப்பாடு வாரியங்கள் உள்ளிட்ட உரிய அதிகார அமைப்புகள் வகுத்துள்ள 'தர'க் கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டதாக இருக்கவேண்டும்.

o. ஆலைக்கழிவுகள் மற்றும் திடக் கழிவுகளைச் சுத்திகரிப்பதற்குத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். சுத்திகரிக்கப்படாத ஆலைக்கழிவுகளும், திடக் கழிவுகளும் கடல் நீரிலோ, கடற்கரையிலோ கலக்க விடப்படவில்லை என்பது உறுதியளிக்கப்பட வேண்டும். எந்தவிதமான ஆலைக் கழிவுகளும், திடக் கழிவுகளும் கடற்கரையில் வெளியேற்றப்படலாகாது.

p. பொது மக்கள் தாராளமாகக் கடற்கரையை அணுகும் வகையில் இரண்டு விடுதிகள் / ஹோட்டல்களுக்கு இடையே குறைந்த பட்சம் 20 மீட்டர் இடைவெளி விடப்பட வேண்டும். எந்த வகையிலும் இடைவெளி 500 மீட்டருக்குக் குறையாததாக இருக்க வேண்டும்.

q. வனப்பகுதி நிலம் வனம் சாரா நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்படுவதாக இருந்தால் காடுகள் (பாதுகாப்பு) சட்டம் 1980இன் கீழ் அனுமதி பெறப்பட வேண்டும். பிற மத்திய/ மாநிலச் சட்டங்கள் திட்டத்தோடு தொடர்புடையதாக இருந்தால் அவற்றின் கீழும் உரிய அனுமதிகள் பெறப்பட வேண்டும்.

r. மாநில/ யூனியன் பிரதேச சுற்றுலா வளர்ச்சித் துறை அனுமதி பெறப்பட வேண்டும்.

II. கடல் பூங்கா, அலையாத்திக் காடு, பவளப் பாறைகள், மீன்கள் இன விருத்தி செய்யும் பகுதிகள், வன விலங்குகள் வாழ்விடங்கள் மற்றும் மத்திய, மாநில, யூனியன் பிரதேச அரசுகளால் அறிவிக்கப்பட்ட அளவிலான சுற்றுச்சூழல் சார் நுண்மை மிகுந்த பகுதியாக இருக்கும் பட்சத்தில் கடற்கரை விடுதிகள் / ஹோட்டல்கள் கட்ட அனுமதிக்கப்படலாகாது..

****

## படிவம் 1 -கடற்கரை ஒழுங்குமுறை மண்டல (CRZ) அறிவிப்பாணையின் கீழ் திட்ட அனுமதி கோருதல் பொருட்டு:

அடிப்படைத் தகவல்
திட்டத்தின் பெயர் :
பரிசீலனையில் உள்ள பகுதி/ இடங்கள் மாற்று :திட்ட அளவு (பரப்பளவு) :
கடற்கரை ஒழுங்குமுறை மண்டலம் (CRZ) வகைப்படுத்தப்பட்ட பகுதி :
எதிர்பார்க்கப்படும் திட்ட மதிப்பீடு :
தகவல் தொடர்பு :

II. செயல்பாடு

1. உள்ளூர்ப் பகுதியில் (இட விவரம், நிலப் பயன்பாடு, நீர் நிலைகளில் மாற்றம் போன்ற) பருண்மையான மாற்றங்களை ஏற்படுத்துவதற்குக் காரணமான கட்டுமானப் பணிகள், இயக்கம், அகற்றுதல் போன்ற திட்டத்தோடு இணைந்த நடவடிக்கைகள்

| எண் | தகவல்கள்/விவரங்கள் உறுதிப்படுத்துதல் | ஆம்/ இல்லை | தொடர்புடைய விவரங்கள் தோராயமான அளவுகள் விலை, விவரம் கிடைத்த வழி அன்னபிற |
|---|---|---|---|
| 1.1 | நிலப் பயன்பாட்டில் நிலைத்த அல்லது தாற்காலிகமான மாற்றங்கள்; நில அளவு மற்றும் நிலவியல் முதலியவை நிலப் பயன்பாட்டின் தீவிரம் உட்பட (உள்ளூர் நிலப் பயன்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட கடற்கரை மேலாண்மைத் திட்டத்தின் படியான கடற்கரை ஒழுங்குமுறை மண்டலம் ( CRZ) வகைப்படுத்தல் விவரம் | | |
| 1.2 | அங்கீகரிக்கப்பட்ட கடற்கரை மண்டல மேலாண்மை திட்டங்களின் அடிப்பையில் CRZ-இன் வகைப்பாட்டின் விவரங்கள் | | |
| 1.3 | கடற்கரை ஒழுங்குமுறை மண்டலம் (CRZ) I பகுதியில் இடம்பெற்றுள்ளதா? | | |
| 1.4 | கடற்கரை ஒழுங்குமுறை மண்டலம் (CRZ) I பகுதியில் இருந்து எத்தனை தொலைவில் உள்ளது? | | |
| 1.5 | மத்திய சுற்றுச்சூழல் வனத்துறை அமைச்சத்தால் தயாரிக்கப்பட்ட வரைபடத்தின் படியான இடர் மண்டலப் பகுதிக்குள் அடங்கியுள்ளதா? | | |
| 1.6 | புயல், சுனாமி, பெரும் அலைகள், நிலத் | | |

| | | | |
|---|---|---|---|
| | தட்டுகள் மோதல், நிலநடுக்கம் போன்றவை ஏற்படும் வாய்ப்புள்ள பகுதியா? | | |
| 1.7 | உப்பு நீர் உட்புகும் வாய்ப்புள்ள பகுதியா? | | |
| 1.8 | தற்போதைய நிலம், தாவரங்கள் மற்றும் கட்டடங்கள் அகற்றப்படுகிறதா? | | |
| 1.9 | புதிய நிலப் பயன்பாடுகள் உருவாக்கப் படுகிறதா? | | |
| 1.10 | கட்டுமானத்துக்கு முந்தைய சோதனைகள் மேற்கொள்ளப் படுகின்றனவா? (உதாரணமாக ஆழ் துளை, மண் சோதனை போன்றவை) | | |
| 1.11 | கட்டுமானப் பணிகள்? | | |
| 1.12 | இடிப்புப் பணிகள்? | | |
| 1.13 | கட்டுமானப் பணிகள் அல்லது கட்டுமானப் பணியாளர்களுக்கான வீட்டு வசதிக்காக தற்காலிக மனைகள் பயன்படுத்தப்படுகிறதா? | | |
| 1.14 | தரைப்பரப்பிற்கு மேற்புறத்திலான கட்டிடங்கள், மேல், கட்டுமானங்கள் அல்லது தரைப்பணிகள் நேர்க்கோட்டு அமைப்புகள் - தோண்டுதல், நிரப்புதல், வெட்டுதல் உள்பட | | |
| 1.15 | சுரங்கம், சுரங்கப் பாதை போன்றவைக்கான நிலத்தடி பணிகள்? | | |
| 1.16 | சமப்படுத்தும் பணிகள்? | | |
| 1.17 | அகழ்ந்தெடுத்தல்- வாருதல்/ சமப்படுத்துதல்/ நிலம் நிரப்புதல்/ வாரப்பட்ட பொருட்களை அகற்றுதல் போன்றவை? | | |
| 1.18 | கடற்கரை அருகில் கட்டுமானங்கள்? | | |
| 1.19 | தயாரிப்பு மற்றும் உற்பத்தி நடைமுறைகள்? | | |
| 1.20 | சரக்குகள் மற்றும் பொருட்கள் இருப்பு வைக்கும் வசதி? | | |
| 1.21 | திடக் கழிவு மற்றும் திரவக் கழிவு சுத்திகரிக்கும், அகற்றும் வசதிகள்? | | |
| 1.22 | திட்ட இயக்கப் பணியாளர்களுக்கான நீண்டகால வீட்டு வசதி? | | |
| 1.23 | கட்டுமானம் மற்றும் இயக்கப் பணிகளின்போது புதிய ரயில், சாலை அல்லது கடல் வழிப் போக்குவரத்துகள்? | | |
| 1.24 | புதிய ரயில்பாதைகள், சாலை வசதிகள் விமானப் போக்குவரத்து மற்றும் புதிய அல்லது மாற்றுப்பாதைகள், நிலையங்கள், சரக்கு முனையங்கள், விமான நிலையங்கள் போன்ற உள்கட்டமைப்பு வசதிகள்? | | |

| | | | |
|---|---|---|---|
| 1.25 | தற்போது பயன்பாட்டில் உள்ள போக்குவரத்துப் பாதைகளை மூடுதல் அல்லது திருப்பி விடுதல்? அல்லது, போக்குவரத்தில் மாற்றம் ஏற்படுத்தும் உள் கட்டமைப்பு வசதிகள்? | | |
| 1.26 | புதிய அல்லது மாற்றிவிடப்பட்ட தகவல்தொடர்புவழிகள் அல்லது குழாய்கள்? | | |
| 1.27 | நீரோட்டங்கள், நீர்ப்படுகைகளில் மாற்றம் ஏற்படுத்தும் - தடுத்தல், மறித்தல், மாற்றிவிடுதல் மற்றும் இதர நடவடிக்கைகள்? | | |
| 1.28 | ஆறுகள், நீரோடைகள் குறுக்கிடுகின்றனவா? | | |
| 1.29 | நிலத்தடி அல்லது சமதள நீர் உறிஞ்சப்படுகிறதா அல்லது மாற்றி விடப்படுகிறதா? | | |
| 1.30 | நீர் நிலைகள் அல்லது சம தளத்தில் ஏற்படுத்தும் மாற்றங்கள் வடிகாலைப் பாதிக்கின்றதா? அல்லது வழிந்தோடச் செய்கின்றதா? | | |
| 1.31 | கட்டுமானம், இயக்குதல் மற்றும் அகற்றுதல் பணிகளுக்கான நபர்கள் அல்லது பொருட்கள் போக்குவரத்து? | | |
| 1.32 | நீண்ட கல இடித்தல், அகற்றுதல் அல்லது மீண்டும் நிறுவும் பணிகள்? | | |
| 1.33 | சுற்றுச்சூழலில் பாதிப்பு ஏற்படுத்தக்கூடிய அகற்றுதல் நடவடிக்கைகள்? | | |
| 1.34 | ஒரு பகுதிக்கு தாற்காலிகமாகவோ அல்லது நிரந்தமாகவோ மக்களைக் கொண்டுவந்து சேர்த்தல் | | |
| 1.35 | அயல்வெளித் தாவரங்கள் அறிமுகம்? | | |
| 1.36 | உள்ளூர்த் தாவரங்களை இழத்தல் அல்லது உயிரியல் பல்வகைமை? | | |
| 1.37 | பிறவேறு செயல்பாடுகள் | | |

2. திட்டத்தின் கட்டுமான, இயக்கும் பணிகளுக்காக நிலம், நீர், பொருட்கள் அல்லது ஆற்றல் போன்ற இயற்கை ஆதாரங்களை பயன்படுத்துதல் குறிப்பாக மீண்டும் உருவாக்க முடியாத அரிய ஆதாரங்களைப் பயன்படுத்துதல்

| **எண்** | **தகவல்கள்/விவரங்கள் உறுதிப்படுத்துதல்** | **ஆம்/ இல்லை** | **தொடர்புடைய விவரங்கள் தோராயமான அளவுகள் விலை, விவரம் கிடைத்த வழி அன்னபிற** |
|---|---|---|---|
| 2.1 | குறிப்பாக, மேம்படுத்தப்படாத நிலம் அல்லது விளைநிலம் | | |
| 2.2 | தண்ணீர் (எதிர்ப்பார்க்கப்படும் ஆதாரம் & எதிர் பயனாளிகள்) அலகு: KLD | | |
| 2.3 | கணிமங்கள் (MT) | | |
| 2.4 | கட்டுமானப் பொருட்கள் - கல், மண்/மணல், கலவை (எதிர்பார்க்கப்படும் ஆதாரம் MT) | | |
| 2.5 | காடுகள், மரம்(டிம்பர்) (ஆதாரம் -MT) | | |
| 2.6 | மின்சாரம், எரிசக்தி ( ஆதாரம், எதிர்பயனாளர்கள்) அலகு: எரிசக்தி (MT) ஆற்றல் (MW) | | |
| 2.7 | வேறு இதர இயற்கை ஆதாரங்கள் (உரிய தரப்படுத்தப்பட்ட அலகுகளை பயன்படுத்தவும்) | | |

3. மனித ஆரோக்கியம் அல்லது சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படுத்தக்கூடிய அல்லது மனித சுகாதாரத்துக்கு ஆபத்து ஏற்படுத்தும் கவலைகளை அதிகரிக்கச் செய்கிற பொருட்கள் அல்லது மூலகன்களைப் பயன்படுத்துதல், கையாளுதல், இருப்பு வைத்தல், தயாரித்தல்

| **எண்** | **தகவல்கள்/விவரங்கள் உறுதிப்படுத்துதல்** | **ஆம்/ இல்லை** | **தொடர்புடைய விவரங்கள் தோராயமான அளவுகள் விலை, விவரம் கிடைத்த வழி அன்னபிற** |
|---|---|---|---|
| 3.1 | அபாயம் தரவல்ல கழிவுப் பொருட்கள் குறித்த விதிகள் (MSIHC) படி மனித நலம் அல்லது சுற்றுச்சூழலுக்கு (தாவரம், விலங்கு மற்றும் நீர் வினியோகம்) போன்றவற்றிற்கு அபாயம் ஏற்படுத்துகிற பொருட்கள் அல்லது மூலகங்கள் பயன்பாடு | | |
| 3.2 | நோய் உருவாக்கத்தில் மாறுதல்கள் அல்லது நோய்க் காரணிகளில் பாதிப்பு (உ-ம்: புழு அல்ல்து நீரில் உருவாகும் நோய்கள்) | | |

| | | | |
|---|---|---|---|
| 3.3 | மக்கள் நலன் பாதிப்பு (உ-ம்: வாழ்நிலைகளில் மாறுதல்) | | |
| 3.4 | திட்டத்தால் பாதிப்பு ஏற்படும் வாய்ப்புகளுள்ள மக்கள் குழுக்கள் உ-ம்: மருத்துவமனை நோயாளிகள், குழந்தைகள், முதியோர் போன்றவர்கள் | | |
| 3.5 | பிறவேறு காரணங்கள். | | |

4. கட்டுமானம், இயக்குதல் அல்லது அகற்றுதல் மூலம் உருவாகும் திடக் கழிவுகள் உருவாக்கம் (MT/மாதம்)

| **எண்** | **தகவல்கள்/விவரங்கள் உறுதிப்படுத்துதல்** | **ஆம்/ இல்லை** | **தொடர்புடைய விவரங்கள் தோராயமான அளவுகள் விலை, விவரம் கிடைத்த வழி அன்னபிற** |
|---|---|---|---|
| 4.1 | இடிபாடுகள், மணல், சுரங்கக் கழிவுகள்: | | |
| 4.2 | நகரக் கழிவுகள் (வீடுகள் மற்றும் வணிகக் கழிவுகள்) | | |
| 4.3 | இடர் ஏற்படுத்தும் கழிவுகள் (இடரேற்படுத்தும் கழிவுகள் மேலாண்மை விதிகள்) | | |
| 4.4 | இதர தொழிற்சாலைக் கழிவுகள் | | |
| 4.5 | உபரி உற்பத்தி | | |
| 4.6 | கழிவுச் சேறு அல்லது சுத்திகரிக்கப்படும் கழிவிலிருந்து உருவாகும் இதர சேறுகள் | | |
| 4.7 | கட்டுமானம் அல்லது இடிபாடுகளால் ஏற்படும் கழிவு | | |
| 4.8 | தேவையற்ற இயந்திரங்கள், உபகரணங்கள் | | |
| 4.9 | மாசு படிந்த மண் அல்லது இதரப் பொருட்கள் | | |
| 4.10 | வேளாண் கழிவுகள் | | |
| 4.11 | இதர திடக் கழிவுகள் | | |

5. மாசுப் பொருட்கள், ரசாயணக் கழிவுகள், உடலுக்கு ஊறு ஏற்படுத்தும் பொருட்கள் மற்றும் இதர இடர் ஏற்படுத்தும் பொருட்களை காற்றில் விடுதல் (kg/hr)

| **எண்** | **தகவல்கள்/விவரங்கள் உறுதிப்படுத்துதல்** | **ஆம்/ இல்லை** | **தொடர்புடைய விவரங்கள் தோராயமான அளவுகள் விலை, விவரம் கிடைத்த வழி அன்னபிற** |
|---|---|---|---|
| 5.1 | நிலையான மற்றும் நகரும் மூலங்களில் இருந்து புதைபடிவ எரிபொருள்களை | | |

| | | | |
|---|---|---|---|
| | எரிப்பதன் மூலம் உருவாகும் வெளியாகும் கசிவு. | | |
| 5.2 | உற்பத்தி நடைமுறைகளிலிருந்து - காற்றில் கலக்கும் கசிவு. | | |
| 5.3 | இருப்பு வைத்தல் மற்றும் போக்குவரத்து உள்ளிட்ட சரக்குகளைக் கையாலும் நடைமுறைகளால் காற்றில் வெளியேறும் கசிவு. | | |
| 5.4 | கட்டுமான நடைமுறைகளால் வெளியேறும் கசிவு. | | |
| 5.5 | கட்டுமானப் பொருட்கள், கழிவுப்பொருட்கள், கழிவு நீர் போன்றவற்றைக் கையாள்வதால் வெளியேறும் கசிவு. | | |
| 5.6 | கழிவுகளைப் மூடிய நிலையில் (சிறப்புக் கருவிகள் வாயிலாக அதிவெப்ப நிலையில்) எரித்தல் வெளியேறும் புகை. | | |
| 5.7 | கழிவுப் பொருட்களை திறந்த வெளியில் எரிப்பதால் வெளியேறும் புகை. | | |
| 5.8 | வேறு இதர வழிகளில் வெளியேறும் கசிவு. | | |

6. ஒளி, வெப்பம் இவற்றால் உருவாகும் ஒலி, அதிர்வுகள், கசிவுகள்

| **எண்** | **தகவல்கள்/விவரங்கள் உறுதிப்படுத்துதல்** | **ஆம்/ இல்லை** | **தொடர்புடைய விவரங்கள் தோராயமான அளவுகள் விலை, விவரம் கிடைத்த வழி அன்னபிற** |
|---|---|---|---|
| 6.1 | உபகரணங்களைக் கையாள்வதன் மூலம் உ-ம்: இயந்திரங்கள், வெண்டிலேட்டர், கிரஷர் | | |
| 6.2 | ஆலை அல்லது அதன் இதன் நடவடிக்கைகள் மூலம் | | |
| 6.3 | கட்டுமானம் அல்லது இடித்தல் மூலம் | | |
| 6.4 | வெடித்தல் அல்லது துளைத்தல் மூலம் | | |
| 6.5 | கட்டுமான அல்லது இயக்குதல் போக்குவரத்து மூலம் | | |
| 6.6 | ஒளியூட்டும் அல்லது குளிரூட்டும் முறைகள் மூலம் | | |
| 6.7 | இதர வழிகள் மூலம் | | |

7. மாசுப் பொருட்களை நிலத்தில், கழிவு நீரில், நிலத்தடி நீரில், கடற்கரைப் பகுதிகளில் உள்ள தண்ணீர் அல்லது கடல் நீரில் நிலம் மாசுபடும் அபாயங்கள்

| **எண்** | **தகவல்கள்/விவரங்கள் உறுதிப்படுத்துதல்** | **ஆம்/ இல்லை** | **தொடர்புடைய விவரங்கள் தோராயமான அளவுகள் விலை, விவரம் கிடைத்த வழி அன்னபிற** |
|---|---|---|---|
| 7.1 | மாசு கலந்த இடர் தரும் பொருட்களைக் கையாள்வது, சேமிப்பது, பயன்படுத்துவது, கழிப்பதன் மூலம் | | |
| 7.2 | கழிவு நீர் அல்லது இதர ஆலைக் கழிவுகளை நீர் அல்லது நிலத்தில் விடுவதன் மூலம் (எதிர்பார்ர்கப்படும் முறை மற்றும் வெளியேற்றப்படும் இடம்) | | |
| 7.3 | காற்று, நீர் அல்லது நிலத்தில் விடப்படும் கழிவுப் பொருட்கள் படிவதனால் | | |
| 7.4 | இதர மூலங்கள் | | |
| 7.5 | இந்த வழிவகைகளிலிருந்து சுற்றுச்சூழலில் மாசுக்கள் நிலைத்த ரீதியில் திரண்டிருக்கும் அபாயம் உண்டா? | | |

**8. செயல்திட்டத்தின் கட்டுமானப்பணிகளின் சமயம் அல்லது செயலாக்கத்தின் போது மனித உயிர்களுக்கும் , சுற்றுச்சூழலுக்கும் பாதிப்புண்டாக்கக்கூடிய அளவிலான விபத்துகள் நேரும் அபாயம்:**

| **எண்** | **தகவல்கள்/விவரங்கள் உறுதிப்படுத்துதல்** | **ஆம்/ இல்லை** | **தொடர்புடைய விவரங்கள் தோராயமான அளவுகள் விலை, விவரம் கிடைத்த வழி அன்னபிற** |
|---|---|---|---|
| 8.1 | அபாயகரமான மூலகங்களைத் தயாரித்தல் சேகரித்துவைத்தல், கையாளுதல், பயன்படுத்துதல் மூலம் ஏற்படக்கூடிய வெடிவிபத்துகள், கசிவுகள், தீவிபத்துகள் மற்றும் இதர செயல்கள் | | |
| 8.2 | இதர காரணங்களின் மூலம் | | |
| 8.3 | இயற்கைப் பேரழிவுகளால் (எ.கா: வெள்ளம், நிலநடுக்கம், நிலச்சரிவு, மேக வெடிப்பு அன்னபிற) இச்திட்டம் பாதிக்கப்படுவதால் சுற்றுச் சூழலுக்கு பாதிப்பு ஏற்படுமா? | | |

9. உள்ளூர்ப் பகுதியில் ஏற்கனவே இருந்துவரும் அல்லது கொண்டுவர திட்டமிடப்பட்டிருக்கும் செய்ல்பாடுகளோடு இணைந்த அளவில் சுற்றுச்சூழல் பாதிப்புகளை உருவாக்கக்கூடிய,

எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய, அதற்குரிய சாத்தியப்பாடுகளைக் கொண்ட (உ-ம்: பின்-விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய வளர்ச்சி-மேம்பாடு திட்டங்கள்) அம்சங்கள்/காரணிகள்:

| எண் | தகவல்கள்/விவரங்கள் உறுதிப்படுத்துதல் | ஆம் / இல்லை | தொடர்புடையவிவரங்கள் தோராயமான அளவுகள் விலை, விவரம் கிடைத்த வழி அன்னபிற வரிசை எண் |
|---|---|---|---|
| 9.1 | இதர துணை வளர்ச்சிப் பணிகளுக்கு வசதிகள் அமைத்தல் அல்லது திட்டத்தினால் தூண்டப்படும் வளர்ச்சியினால் சுற்றுச் சூழலில் பாதிப்பு ஏற்படுத்தக்கூடிய வாய்ப்பு எ.கா ஆதரவு கட்டமைப்பு வசதிகள் (சாலைகள், மின்விநியோகம், கழிவு அல்லது கழிவு நீர் சுத்திகரிப்பு, இதர)<br>• வீட்டு வசதி மேம்பாடு<br>• ஈர்க்கப்படும் தொழில்கள்<br>• விநியோகத் தொழில்கள்<br>• மற்றவை | | |
| 9.2 | தொடர்புடைய தளத்தின் பின்னான-உபயோகத்திற்கு வழிவகுத்து அதன் மூலம் சுற்றுப்புறத்தில் தாக்கமேற்படுத்தல் | | |
| 9.3 | பின்னாளைய வளர்ச்சி-மேம்பாடுகளுக்கான முன்மாதிரியை ஏற்படுத்துதல் | | |
| 9.4 | ஒரேயளவான தாக்கங்களைக் கொண்ட அளவில் ஏற்கனவே இருந்துவரும் அல்லது கொண்டுவரப்படவுள்ள பிற செயல்திட்டங்களோடு இணைந்த அளவில் எதிர்மறைத் தாக்கங்களை ஏற்படுத்துதல் | | |

**சுற்றுச்சூழல் நுண்ணுணர்வு நுட்பம்**

| எண் | பகுதிகள் | பெயர்/அடையாளம் | வான்மார்க்க தொலைவு(15 கி.மீக்கு உட்பட்டது) தொடங்கவுள்ள செயல்திட்டத்தின் அமைவிட எல்லைகள் |
|---|---|---|---|
| | சர்வதேசிய உடன்படிக்கைகள், தேசிய மற்றும் உள்ளூர் உள்ளூர் அளவிலான சட்டங்கள் மூலம், அவற்றின்வாழ்க்கைச்சூழல், நிலப்பரப்பின் முக்கியத்துவம், கலாச்சார மற்றும் தொடர்புடைய மகத்துவங்கள் காரணமாகப் பாதுகாக்கப்பட்டு வரும் பகுதிகள் | | |
| 2 | வாழ்க்கைச்சூழல் காரணங்களால் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகள் – ஈர நிலங்கள், நீர்வழிகள், அல்லது நீர்நிலைகள், கடற்கரை மண்டலம், உயிர்மவெளிகள், மலைகள், காடுகள், அன்னபிற | | |
| 3 | அரிய மலர்வகைகள், விலங்கினங்கள் ஆகியவை இடம்பெறும் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகள், அவற்றின் வளர்ப்பு, கூடுகட்டுதல், ஓய்வெடுத்தல், குளிர்காலத்தில் உறைவிடமாக்கிக்கொள்ளுதல், இடப்பெயர்வு ஆகியவற்றிற்கு முக்கியமான பகுதிகளாக விளங்குபவை | | |
| 4 | நாட்டின் உட்பகுதியில் அமைந்துள்ள, கடலோரப் பகுதிகளிலுள்ள கடலிலுள்ள மற்றும் நிலத்தடி நீர்கள் | | |
| 5 | மாநில, தேசிய எல்லைகள் | | |
| 6 | பொழுதுபோக்கிற்காக அல்லது புனித யாத்திரை மேற்கொள்ள, சுற்றுலா செல்ல பொதுமக்கள் பயன்படுத்தும் பாதைகள்/மார்க்கங்கள், வசதிகள் | | |
| 7 | இராணுவத் தளவாடங்கள் அமைக்கப்பட்டுள்ள பகுதிகள் | | |
| 8 | மக்கள் நெரிசல் மிக்க அல்லது நெரிசலாக கட்டிடங்கள் அமையப் பெற்ற பகுதிகள் | | |
| 9 | மனிதர்களால் உருவாக்கப்பட்ட நுண்மையான நிலப் பயன்பாடுகளுக்காக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள பகுதிகள் – | | |

| | | | |
|---|---|---|---|
| | (மருத்துவமனைகள், பள்ளிகள், வழிபாட்டுத்தலங்கள், சமுதாயக்கூடங்கள், அன்னபிற வசதிகள்) | | |
| 10 | முக்கியத்துவம் வாய்ந்த, உயர்தர மற்றும் அரிய வள ஆதாரங்கள் அமைந்துள்ள பகுதிகள் – நிலத்தடி நீர் வள ஆதாரங்கள், புவிப்பரப்பில் அமைந்துள்ள வள ஆதாரங்கள், வனப்பிரதேசங்கல், வேளாண்நிலங்கள், மீன்பிடித்துறைகள், சுற்றுலாப்பகுதிகள், கனிமவளங்கள் | | |
| 11 | ஏற்கனவே சுற்றுச்சூழல் மாசுக்கும்சிதைவுக்கும் ஆளாகியுள்ள பகுதிகள் – சட்டரீதியாக அனுமதிக்கப்பட்டுள்ள சுற்றுச்சூழல் சார் தரநிர்ணயங்கள் மீறப்படும் பகுதிகள் | | |
| 12 | இயற்கைச் சீற்றங்களுக்கும், பேரிடர்களுக்கும் ஆளாகக்கூடிய, அவ்வகையில் சம்பந்தப்பட்ட செயல்திட்டம் சுற்றுச்சூழல் சார் பாதிப்புகளை உருவாக்கும்படியான அபாயத்தை ஏற்படுத்தக்கூடிய பகுதிகள் – (நிலநடுக்கங்கள், நிலச்சரிவுகள், மிகக் கடுமையான அல்லது எதிர்மறை பாதிப்புகளை ஏற்படுத்த வல்ல தட்பவெப்பநிலை, வெள்ளப்பெருக்கு, அருகிவரும்/இறங்கிவரும் நிலப்பரப்பு முதலியன) | | |

****